இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 04 | திகதி : 06.03.2022 | விலை : 30.00

## நற்செயல்களில் ஈடுபட்டு, தேவையில் வாழ்வோரில் இயேசுவைக் காண்போம்

### தவக்காலச் சுற்றுமடலில் யாழ். ஆயர்

தவக்காலத்தில் நாம் பல தவ முயற்சிகளைச் செய்யவேண்டும் என மன விருப்பம் கொண்டுள்ளோம். இத் தவ முயற்சிகள் ஏன் செய்கின்றோம், அதனால் பிறரும் நாமும் அடையும் நன்மைகள் தான் எவை என்று சிந்திப்பதில்லை. நம்மையே கட்டுப்படுத்தி, தீமையே செய்யத்தூண்டும் ஆசைகளை ஒதுக்கித்தள்ளும் சக்தியை தவம் தருகின்றது.

நாம் நோன்பு இருப்பதன் மூலம் நம்மையே மறுத்து, கடவுளுக்குச் செவிசாய்க்கத் துணை செய்கின்றது. நோன்பு இருப்பது என்பது உணவு மட்டுமல்ல, அது பாவச் செயல்களையும் எண்ணங்களையும் விலக்கி, மனத் தூய்மை பெற்று, கடவுளோடு நாம் ஒப்புரவாக உதவுகின்றது.

எனது நோன்பு எனது அடுத்திருப்பவனின் பசியைப் போக்க வேண்டும். எம் ஒறுத்தலினால் இல்லாதவர் வாழ்வு பெறவேண்டும். எனவே, இத்தவக்காலத்தில் நற்காரியங்களில் ஈடுபட்டுச் செயலுடன் கூடிய தப முயற்சியினால் தேவையில் வாழும் எம் சகோதரர்களில் துன்புறும் இயேசுவைக் காண முயல்வோம்.



முழுமையான சுற்றுமடலை பக்கம் 03 இல் காண்க

## யாழ் ஆயரைச் சந்தித்தார் மைத்திரிபால



யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் இலங்கை ஜனாதிபதியும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்த நிலையில் கடந்த 20ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை சந்தித்தார்.

ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச் சந்திப்பின்போது யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைபற்றியும், நாட்டில் தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடி பற்றியும் ஆயருடன் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர மற்றும் துமிந்த திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன் மற்றும் சுரேன் ராகவன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

## ஈஸ்ரர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி சர்வதேச உதவியை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை

### ஆயர்கள் பேரவை அறிக்கை

2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடந்து ஆயிரம் நாட்களும் கடந்து விட்டன. நூற்றுக் கணக்கான அப்பாவி உயிர்களைக் காவு கொண்ட தாக்குதலுக்குக் காரணமான அனைவரையும் நீதிமன்றின் முன் கொணருமாறு இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை மீண்டும் மீண்டும் வெளியிட்ட அறிக்கைகளிலும் இறுதியாக தை 14ம் திகதி, 2022 அன்று வெளியிட்ட சுற்று மடலிலும் அரசாங்கத்திடம் வலியுறுத்தி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் தவறியமை குறித்து இலங்கை ஆயர்கள் பேரவை அதிர்ச்சியடைந்துள்ளது. தாமதம் மட்டுமன்றி உண்மையை மறைக்கவும், படுகொலையை அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தவும், பிரச்சினைகளைச் சிக்கலாக்கவும் முயற்சிகள் நடப்பதாகத் தோன்றுவதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி சர்வதேச உதவியை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. ☞ 08

## நூறு பக்தர்களுடன் கச்சைதீவு புனித அந்தோனியார் திருவிழா

மார்ச் மாதம் 11ம், 12ம் திகதிகளில் நடைபெறவுள்ள கச்சைதீவு புனித அந்தோனியார் வருடாந்தத் திருவிழா சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக ☞ 11

## திருத்தந்தையைத் தனியாகச் சந்தித்த பேராயர் கர்தினால் மல்கம் ஆண்டகை



கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் இரஞ்சித் ஆண்டகை கடந்த பிப்ரவரி 28ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, திருப்பீடத்தில் தனியாகச் சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பின் போது இலங்கைக் கத்தோலிக்கத் திருஅவையின் இன்றைய நிலைப்பாட்டினை திருத்தந்தை அவர்கள் பேராயரிடம் கேட்டறிந்து கொண்டார்.

திருத்தந்தை அவர்கள் ஈஸ்ரர் படுகொலையில் இறந்தவர்கள் பாதிக்கப்பட்டோர் இறைவனின் தேற்றுதலைப்பெற பிரார்த்திப்பதாகவும் வாக்குறுதி அளித்துள்ளார்.

## தர்மபிரபாஸ்பர விருது பெறும் யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த நால்வர்



தேசிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் ஆசீருடன் தேசிய கத்தோலிக்க வெகுசன ஊடக மத்திய நிலையமும் தேசிய கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் இணைந்து நடாத்திய தர்மபிரபாஸ்வர விருது வழங்கும் நிகழ்வு கடந்த 24ஆம் திகதி கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 40 கலைஞர்கள் விருதுவழங்கி க் கௌரவிக்கப்பட்டார்கள். ☞ 08

## கூட்டொருங்கியக்க வினாக்கொத்துக்கள் பகுப்பாய்வு



கூட்டொருங்கியக்க வினாக்கொத்துக்கள் பங்குகளிலிருந்து பெற்றுக்கொண்ட நிலையில் அவற்றைத் தொகுத்து அறிக்கையிடும் பணிகள் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

மறைக்கோட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் குருக்கள் துறவியர் இணைந்து வினாக்கொத்தில் அமைந்துள்ள பத்துப் பிரிவுகளையும் தனித்தனியாகப் பகுத்தாய்ந்து தொகுத்து அறிக்கையிடும் பணி கடந்த பங்குனி 01ம் திகதி புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றது.

# எமது எண்ணம்

## தவக்காலத்தில் அருள்வாழ்வில் நிலைத்திருப்போம்

காலங்களை நாம் இயற்கையின் மாறுதலுக்கேற்ப தட்ப வெப்ப சூழ்நிலையின் அடிப்படையில் பிரிக்கிறோம். பொதுவாக தவக்காலம் இலையுதிர் காலம் முடிந்து புதிய இளமையுடன் ஆரம்பிக்கும் வசந்த காலத்தில் வருகிறது. புதிய இளம் தளிர்கள் பச்சைப்பசேலெனத் துளிர்த்து நிற்கும் பருவமிது. ஆன்மீகப் பயணத்தில் பழையன உதிர்ந்து புத்துயிர் துளிர்க்கும் ஆன்மீக வசந்த காலம் தான் தவக்காலம்.

தவக்காலத்தைப் பாஸ்கா ஆயத்தகாலம் என்று கூடச் சொல்கிறோம். இயேசுக்கிறிஸ்துவின் வாழ்விலே முக்கிய நிகழ்ச்சிகளாகிய இறப்பு, உயிர்ப்பு எனும் மறைநிகழ்ச்சிகளைத் தகுதியான உள்ளத்துடன் கொண்டாட நம்மைத் தயாரிக்கும் காலமிது.

தவக்காலம் என்பது சோகத்தின் காலமல்ல. பாவத்தை மட்டும் நினைத்துக் கண்ணீர் விடும் காலமும் அல்ல. உடலை ஒறுத்து, வருத்தி, கடினதபசு செய்யும் காலமும் அல்ல. தவக்காலம் ஆண்டவர் இயேசுவின் பாடுகளின் மீது பரிதாபப்பட்டுக் கண்ணீர் வடிக்கும் காலம் அல்ல. மாறாக, தவக்காலம் இறைவனின் அருளை இன்னும் அதிகமாக நமக்குப் பெற்றுத்தரும் அருளின் காலம். அருளின் ஊற்றாகிய இறைவனிடமிருந்து, தனிப்பட்ட முறையிலே அவரோடு நெருங்கி வாழ்வதன் மூலமாக, சிறப்பான இறையருளைப் பெறும் காலம். இத்தவக்காலத்தில் நாம் இறைவனோடும், அயலாரோடும் உள்ள அன்புறவின் நிலையைச் சீர்தூக்கிப் பார்த்து, உறவின் விரிசல்களைச் சரிசெய்யும் ஒப்புரவின் காலம். ஒப்புரவின் இறைவனாகிய யேசுக்கிறிஸ்து கொண்டு வந்த இறையருளை ஒப்புரவின் மூலம் நிறைவாகப் பெறுகிறோம். தவக்காலம் ஆண்டவரோடு நம் அன்பை அதிகமாக அனுபவித்து, நாம் ஒவ்வொருவரும் இறையன்பால் நிரப்பப்பட்டு, பிறரன்பு செயலில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட அழைக்கும் அன்பின் காலம். இந்த நாற்பது நாட்களிலே நாம் கடவுளோடு இன்னும் அதிக நெருக்கமாய் இணைந்து, அவர் நெஞ்சுக்கு நெருக்கமானவர்களாகவும், இதயத்திற்கு இனியவர்களாகவும் புனிதத்தில், தூய்மையில் அவரோடு வளரவும், வாழவும் அழைக்கும் புனிதத்தின் காலம். இந்த நாற்பது நாட்கள் நாம் இறைவனோடு உறவு கொள்கின்ற தியான நாட்கள்.

இந்தப் புனித நாட்களில் நமது ஆன்மாவையும், மனத்தையும், சிந்தனைகளையும், உறவுகளையும் தூய்மைப் படுத்திக் கொண்டு, வரவிருக்கும் காலங்களுக்கு இறைசக்தியை நாம் சேமித்துக் கொள்ளும் காலம். இனிவரும் நாட்களிலே இறைவனை அதிகமாக அறிந்து, அறிவினால் தெளிவுபெற்று அன்பு செய்து அன்பினால் தூண்டப்பட்டு இறைவனுக்கும், படைப்புப் பொருட்களை நல்முறையில் பயன்படுத்தி அயலவரை அன்பு செய்யவும் வேண்டிய இறை சக்தியைப் பெற்றுத் தரும் காலம் தான் இந்தத் தவக்காலம்.

எமது மனதை ஒருநிலைப்படுத்தி உள்ளத்தை இறைவன் பால் கொண்டு செல்வதற்கு இந்தத் தவக்காலம் எம்மை அழைத்து நிற்கின்றது. எம்மிடம் உள்ளவற்றை ஏழை, எளியவர்களுடன் பகிர்ந்து வாழும் மனப்பான்மையை உருவாக்கும் ஒரு இனிய காலமாகவும், அயலவர் மீது அன்பு செலுத்தி அவர்களைப் புரிந்துகொண்டு நல்லுறவை வளர்க்கும் காலமாகவும் இது உள்ளது.

எனவே நம் ஆன்ம வாழ்வின் மறுமலர்ச்சிக்கும், சமூக உறவுகளின் புதுப்பித்தலுக்கும் தவக்காலத்தின் 40 நாட்களையும் பயன்படுத்துவோம். புலன்களை அடக்கி, உடலினை ஒறுத்து, நம் பாவங்களுக்காக நொறுக்கப்பட்ட இயேசுக் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெற முயற்சிப்போம். நம் பாவங்களுக்காக மனம் வருந்துவோம் மனம் திருந்துவோம் நம்மை அரவணைக்கக் காத்துக்கொண்டிருக்கும் கடவுள் தந்தையிடம் செல்வோம். இந்த நாட்களில் திருவிவிலியத்தை வாசித்து கடவுளின் அன்பையும் இரக்கத்தையும் உணர்ந்து, நம்வாழ்வை புதுப்பித்துக்கொள்வோம். ஒப்புரவு அருளடையாளத்தில் நம் பாவங்களை அறிக்கையிட்டு, கடவுளின் மன்னிப்பைப் பெற்று, அருள் வாழ்வில் நிலைத்திருப்போம். நம் சமூக உறவுகளை புதுப்பித்துக் கொள்வோம்.

தலையான 7 பாவங்களையும் (அகங்காரம், கோபம், பால் இன்பவேட்கை, கஞ்சத்தனம், உணவு வேட்கை, வெறுப் புணர்பு, சோம்பல் என்பவற்றை) விலக்கி வாழ்தல் கடவுளோடும், மனிதரோடும் உறவு ஒன்றிப்புக்கு வழியாக அமையும். பாவத்தால் பாதை தவறிச் சென்ற நாம் திரும்பிவர, தவமும் செபமும் செய்வோம். அன்னை மரியா மற்றும் புனித சூசையப்பரைப் போல, இறைவனின் திருவுளத்தை நாடுவோம். புனித பவுலடியாரின் அறிவுரையை ஏற்று, கிறிஸ்துவின் மனநிலையை நமதாக்கிக் கொள்வோம்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# உரும்பிராயில் லூர்து அன்னை கெபி



உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில், முந்நாள் ஆலய அருட்பணி சபையின் முயற்சியோடு அமைக்கபட்டு வந்த புனித லூர்து அன்னை கெபியானது, கடந்த மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது.

புதிய கெபியில் ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி இடம்பெற்றது. இக் கெபிக்குரிய முழுமையான நிதிப்பங்களிப்பை உரும்பிராயைச் சேர்ந்த தற்போது பிரான்சில் வாழும் திரு.தியடோர் அகிலன் அவர்கள் வழங்கியிருந்தார். கெபியின் கட்டுமானப்பணியினை உள்ளூர் கலைஞரான திரு.சின்னப்பு குணரத்தினம் அவர்கள் மேற்கொண்டார். மேற்படி திறப்புவிழா நிகழ்வானது அயல் ஆலயப் பங்கு மக்கள், புனித மிக்கேல் ஆலயப் பங்கு மக்கள் மற்றும் மண்ணின் மைந்தர்களான அருட்பணி இராசேந்திரம் ஸ்ராலின், அருட்பணி யோ.யோண்குரூஸ் ஆகியோரின் பிரசன்னத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வினைப் பங்குத் தந்தை அருட்பணி சி.அ.அருட்செல்வன் அவர்கள் தமது ஒழுங்குபடுத்தலின் கீழ் ஆலய அருட்பணிச் சபையினரோடு இணைந்து சிறப்பாக நிறைவேற்றி வைத்தார்.

# மானிப்பாய் பங்கில் குடும்ப விழா



மானிப்பாய்ப் பங்கில் அமைந்துள்ள புனித அன்னம்மாள் ஆலயத்தில் அவ்வாலயத்தைச் சேர்ந்த அனைத்துக் குடும்பங்களையும் ஒன்றிணைத்து குடும்ப விழா 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அங்கு கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி ம.றெக்ஸ் சவுந்தரா அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந் நிகழ்வில் பெற்றோர், சிறுவர்கள் மற்றும் இளையோருக்கான கருத்தமர்வுகள் இடம் பெற்றதுடன் அனைவருக்குமான மதிய உணவு அங்கு மக்களால் சமைக்கப்பட்டு குடும்பங்களாக இணைந்து மதிய உணவில் கலந்துகொண்டார்கள். சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வில் அனைத்து மக்களும் வேற்றுமைகள் பிரிவினைகளைக் களைந்து ஒற்றுமையாக இணைந் திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# திருப்பாலத்துவ சபையினரின் சிறப்புத் திருப்பலிகள்

## நாரந்தனையில்



நாரந்தனைப் பங்கில் திருப்பாலத்துவ சபையின் விசேட திருப்பலி கடந்த மாதம் 27ஆம் திகதி நடைபெற்றது. திருப்பாலத்துவ சபைச் சிறார்கள் இணைந்து வந்து அர்த்தமுள்ள முறையில் திருப்பலியில் பங்கேற்றனர்.

திருப்பலியைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளும், கலை நிகழ்வுகளும் ஆலய வளாகத்தில் நடைபெற்றன. அன்றைய நாளில் திருப்பலியை மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி எஸ்.ஏ.றொஷான் அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். இப் பங்கைச் சார்ந்த சிறார்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வுக்கான முன்னாயத்த அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

இந்நாளில் அனைத்து நிகழ்வுகளையும் நாரந்தனைப் பங்குத்தந்தை அருட்பணி எஸ்.அஜந்தன் அடிகளார் மிகவும் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

## புலோப்பளையில்



புலோப்பளைப் பங்குத்தந்தை அருட்பணி எஸ்.ஏ.ஜோர்ஜ் அடிகளாரின் வழிநடத்தலின் கீழ் திருப்பாலத்துவ சபை சிறார்களுக்கான சிறப்புத் திருப்பலி கடந்த மாதம் 13ம் திகதி நடைபெற்றது.

புலோப்பளைப் பங்கைச் சார்ந்த அனைத்து ஆலயங்களைச் சேர்ந்த எண்பதுக்கும் மேற்பட்ட சிறார்கள் ஒன்றிணைந்து திருப்பலியில் பங்கேற்றனர்.

திருப்பலியைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள், ஆலய முன்றலில் இடம்பெற்றன.

அன்றைய நாளில் திருப்பலியை மறைமாவட்ட இயக்குனர் அருட்பணி எஸ்.ஏ.றொஷான் அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். இப் பங்கைச் சார்ந்த சிறார்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வுக்கான முன்னாயத்த அறிவுரைகளும் அன்றைய நாளில் வழங்கப்பட்டன.

# காவலன் கலசம்



## இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ். மறைமாவட்ட ஆயரான ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொது நிலையினர் ஆகிய

# இறைமக்களுக்கு விடுக்கும் தவக்காலச் சுற்றுமடல்

*கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய இறைமக்களே!*

**முன்னுரை**

தவக்காலம் என்பது நம் மனித வாழ்வின் மேன்மைக்காக இறைவன் தரும் ஓர் அரிய வாய்ப்பாகும். கடவுள் தம் திருமகன் இயேசு வழியாக இந்த உலகிலே நிறைவேற்றிய மீட்புப்பணியை நாம் நினைவுகூர்ந்து பாஸ்கா விழாவைத் தகுதியுடன் கொண்டாட இறைவன் நமக்குத் தரும் ஓர் அருளின் காலமே இத் தவக்காலமாகும்.

இயேசுவின் பாடுகளைத் தியானிக்கும் இத் தவக்காலத்தில் எம் தனிப்பட்ட, மனிதகுலப் பாவங்களின் நிலை பற்றித் தியானிக்கவும் அதில் இருந்து விடுபட்டு அருள் வாழ்வில் வளர்வதற்கும், அதில் நிலைத்து நிற்பதற்கும் பல சந்தர்ப்பங்கள் தரப்படுகின்றன. மனம் மாறுவதற்கும், மனம் திரும்புவதற்கும் ஏதுவாகத் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களும் தவக்கால முயற்சிகளும் நமக்கு வழங்கப்படுகின்றன.

**தவக்காலத்தில் செய்ய வேண்டியவையும், செய்யக் கூடாதவையும்**

தவக்காலத்தில் நாம் பல தவ முயற்சிகளைச் செய்யவேண்டும் என மன விருப்பம் கொண்டுள்ளோம். இத் தவ முயற்சிகளை ஏன் செய்கின்றோம்? அதனால் பிறரும் நாமும் அடையும் நன்மைகள் தான் எவை? என்று சிந்திப்பதில்லை. நம்மை கட்டுப்படுத்தி, தீமையை செய்யத் தூண்டும் ஆசைகளை ஒதுக்கித்தள்ளும் சக்தியை தவம் தருகின்றது. தவம் நம்மில் இருக்கின்ற ஆணவத்தை அழிக்கவும் துணை செய்கின்றது. நாம் நோன்பு இருப்பதன் மூலம், நம்மையே மறுத்து கடவுளுக்குச் செவிசாய்க்கத் துணை செய்கின்றது. நோன்பு இருப்பது என்பது உணவு மறுத்தல் மட்டுமல்ல, அது பாவச் செயல்களையும் எண்ணங்களையும் விலக்கி, மனத்தூய்மை பெற்றுக் கடவுளோடு நாம் ஒப்புரவாக உதவுகின்றது. நாம் எம்மை வருத்தி மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாட்டினாலும் மற்றவர் வாழ்வு காண வேண்டும். எனது நோன்பு எனது அடுத்திருப்பவனின் பசியைப் போக்கவேண்டும். எம் ஒறுத்தலினால் இல்லாதவர் வாழ்வு பெறவேண்டும். எமது ஒறுத்தலின் செயல் ஈகையில் நிறைவு காணவேண்டும். எனவே, இத்தவக்காலத்தில் நற்காரியங்களில் ஈடுபட்டுச் செயலுடன் கூடிய தப முயற்சியினால் தேவையில் வாழும் எம் சகோதரர்களில் துன்புறும் இயேசுவைக் காண முயல்வோம். "பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும், உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நாம் விரும்பும் நோன்பு" (எசா.58:6-7)

***ஆன்மீகச் செயற்பாடுகளாக*** நாளாந்தத் திருப்பலிகளிலும், அருட்சாதனக் கொண்டாட்டங்களிலும் பங்கேற்பதும் ஒப்புரவு (பாவசங்கீர்த்தனம்) அருட்சாதனத்தைப் பெறுவதும், சிலுவைப்பாதைத் தியானங்களில் ஈடுபடுவதும் இக்காலத்தில் வரவேற்கத்தக்கவையாகும்.

***சமூகச் செயற்பாடுகளாக*** எம் அன்பியங்களிலும் அயலகளிலும் தேவையில் உள்ளோர், வருத்தத்துடன் வாழ்வோர், ஏழைகள், யாருமற்ற வயோதிபர்களைக் காணுதல், சிறையில் உள்ளோரைச் சந்தித்தல் போன்ற அறச் செயல்களை இக்காலத்தில் செயற்படுத்த முயல்வோமாக.

***தனிமனித செயற்பாடுகளாக*** எமக்கு 'பிடிக்காதோர்' எனப் புறம் தள்ளப்பட்ட உறவுகளை மன்னித்து நேசிப்போம். உறவு விரிசலுக்குக் காரணமான புறம்கூறல், கேலிப்பேச்சு, புண்படுத்தும் வார்த்தைகள் என்பவற்றைப் புறக்கணித்து, அன்பைப் பிறருடன் பகிர்வோம். போதையையும் மதுவையும் விலக்குவோம். பொழுது போக்கில் காலத்தை வீணாக்காது கிடைக்கும் நேரங்களில் இறைவார்த்தையைப் படிப்போம். 'மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்" (லூக். 3:8) என்ற திருமுழுக்கு யோவானின் வார்த்தைகளுக்கு ஏற்ப இத் தவக்காலத்தில் மனம் மாற்றம் கண்டு வாழ்வோமாக.

**நெருக்கடி நிலை மாற மன்றாடுவோம்**

இன்று நாம் பெரும் தொற்றின் காரணமாகவும், அரசியல் நிலைமையினாலும் பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்துள்ளோம். இதற்குப் பிரதான காரணம் எம் நாட்டின் அரசியல் நிலைப்பாடும், நீதி நேர்மை அற்ற அரசியல்வாதிகளின் செயற்பாடுகளும் அவர்கள் கொண்டுள்ள பேராசையும் பதவிமோகங்களுமேயாகும். அடிப்படை உணவுப் பொருட்கள், எரிபொருட்கள், மூலதனப் பொருட்களின் தட்டுப்பாடு, விலை ஏற்றம் போன்றவை எம் மக்களைப் பெரும் துயரத்துக்கு இட்டுச் சென்றுள்ளது. எனவே, இப்பெரும் துயரிலிருந்து இயேசு எம்மை மீட்க வேண்டுமென அனுதினம் மன்றாடுவோம்.

**சக வாழ்வின் ஊடாகக் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாவோம்**

நாம் நமது சகோதர மத உறவுகளுடன் சமூகத்தில் வாழ்கின்றோம். ஆகவே எப்போதும் எம் மத்தியில் சக வாழ்வை மேம்படுத்தி கிறிஸ்துவிற்கு உண்மைச் சாட்சிகளாக வாழ்வதன் வழியாக இயேசுவை எம் சமூகத்தில் பிரதிபலிக்க வேண்டும். பிற மத சகோதரர்களுடன் உறவு விரிசல்களை ஏற்படுத்தக்கூடிய கருத்துச் சிந்தனைகள், கருத்துப் பரிமாற்றங்கள், செயற்பாடுகள் என்பவற்றைத் தவிர்க்க வேண்டும். பிற மத சகோதரர்களுடன் அன்புறவைக் கட்டியெழுப்பி வாழ்வது இக்காலத்தின் தேவையாகக் கருதுகின்றோம்.

**கூட்டொருங்கியக்க மறைமாவட்டக் கருத்துக் கணிப்பு**

பங்கேற்கும் திருஅவையாகப் பயணிக்கும் நாம், நடைபெறவுள்ள ஆயர்கள் மாமன்றத்திற்கான மறைமாவட்டக் கருத்துக் கணிப்பைக் கோரியபோது ஆக்கபூர்வமான பதில்களை வழங்கிய உங்களுக்கு எமது நன்றிகள். அவற்றைத் தொகுத்து அறிக்கையிடும் பணியைத் தற்போது மேற்கொண்டு வருகின்றோம். திருஅவையின் புதுப்பித்தலுக்காக அனுதினமும் மன்றாடுமாறும் வேண்டி நிற்கின்றோம்.

**நிறைவாக**

"மனிதனே! நீ மண்ணாக இருக்கின்றாய், மண்ணுக்கே திரும்புவாய்" என்பதை இத் தவக்காலத்தில் உணர்ந்தவர்களாக, வெறுமையாய் இறந்து, பெருமையாய் உயிர்த்த இயேசுவைப்போல் நாமும் வெறுமையாய் இறப்போம் பெருமையாய் உயிர்ப்போம்.

இறை இயேசு உங்கள் ஒவ்வொருவரையும், உங்கள் குடும்பங் களையும் இவ் அருளின் காலத்தில் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள,*
**பேரருட்கலாநிதி**
**யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
**யாழ். மறைமாவட்ட ஆயர்**

# நன்மை செய்வதில் மனம் தளராது இருப்போமாக

நமக்கும் மற்றவருக்கும் மீட்பின் பலனை அறுவடை செய்யும் வண்ணம் நன்மைத்தனத்தின் விதைகளை விதைப்போம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தவக்காலத்திற்கென்று எழுதியுள்ள செய்தியில் நம்பிக்கையாளர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

நன்மை செய்வதில் மனம் தளராது இருப்போமாக. நாம் தளர்ச்சி அடையாது இருந்தால் தக்ககாலத்தில் அறுவடை செய்வோம். ஆகையால் 'காலம் இருக்கும் போதே எல்லோருக்கும் சிறப்பாக நம்பிக்கை கொண்டோரின் குடும்பத்தினருக்கும் நன்மை செய்ய முன்வருவோம்' என புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமடலில் மையப்படுத்தி குறிப்பாக கலாத்தியருக்கு எழுதிய திருமுகம் 6ம் அதிகாரம் 9-10 வரையான பகுதியில் மையப்படுத்தி திருத்தந்தை அச்செய்தியை வெளியிட்டுள்ளார்.

**கடவுளின் உடன் பணியாளர்கள்**

விதைத்தல் மற்றும் அறுவடை செய்தல் ஆகிய இரு உருவகங்களை மையப்படுத்தி இச்செய்தியை துவக்கியுள்ள திருத்தந்தை மன நிலையில் மாற்றம் கொணரும் மனமாற்றத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த மனமாற்றம் வழியாக கொடுப்பதில் அல்ல மாறாக கொடுப்பதிலும் சேர்த்து வைப்பதிலும் அல்ல மாறாக நன்மைத்தனத்தைப் பகிர்ந்து கொள்வதிலும் வாழ்வின் உண்மை மற்றும் அழகைக் கண்டு கொள்ள முடியும் என்றும் திருத்தந்தை தன் தவக்காலச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நம் மனித குடும்பத்தில் அளவற்ற நன்மைத்தனத்தின் விதைகளை முதலில் விதைப்பவர் கடவுள் என்றும் தவக்காலத்தில் இறைவார்த்தைக்கு செவிமடுத்தல் வழியாகக் கடவுளின் இக்கொடைக்கு நாம் பதிலளிக்க அழைக்கப்படுள்ளோம் என்றும் இது நம் வாழ்வில் பல நன்மைகளைக் கொணரும் என்றும் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு வாழ்ந்தால் கடவுளின் உடன் பணியாளர்களாக நாம் மாற முடியும் என்றும் இது கடவுளின் அளவற்ற நன்மைத்தனத்தில் பங்குகொள்ள அருளை வழங்கும் என்றும் திருத்தந்தை அவர்கள் எடுத்துரைத்துள்ளார்.

**அறுவடை செய்தல்**

நாம் ஆற்றுகின்ற நன்மைத்தனமும் காட்டுகின்ற கனிவும் எவ்வளவு சிறியவையாக இருந்தாலும் அவை நம் வாழ்வில் ஒளியை பிரதிபலிக்கின்றது. மற்றும் கிறிஸ்துவின் நறுமணத்தையும் உலகிற்கு எடுத்துச் செல்கின்றது என்றும் கூறியுள்ள திருத்தந்தை விதைப்பவர் ஒருவர் அறுவடை செய்வர் வேறொருவர் யோவான் (4:37) என்று கூறினார்.

விதைப்பின் பலனில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே நாம் காண்போம். மற்றவரின் நலனுக்காக நன்மைத்தனத்தை விதைப்பது சுயநல ஆதாயத்தைத் தேடுவதில் இருந்து நம்மை விடுதலை செய்கிறது. கைமாறு கருதாமல் நாம் செயற்படத் தூண்டுகின்றது. மற்றும் கடவுளின் நன்மைத்தனம் நிறைந்த திட்டத்தில் ஒரு பகுதியாகவும் நம்மை அமைக்கின்றது. எனவும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

**இறைவேண்டல், உண்ணா நோன்பு, பிறரன்புச் செயல்கள்**

தவக்காலத்தின் பாரம்பரியமாக ஆற்றப்பட்டு வரும் இறைவேண்டல், உண்ணா நோன்பு, பிறரன்புச் செயல்களை புனித பவுல் கலாத்தியருக்குக் கூறியுள்ள சொற்களோடு இணைத்துக் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடவுளும் மற்றவர்களும் தேவையென்பதால் இறைவேண்டல் செய்வதில் நாம் தளராது இருப்போம் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

பாவத்திற்கெதிரான போராட்டத்தில் ஒப்புரவு அருளடையாளம் வழியாக நம் ஆன்மாவை உறுதிப்படுத்தும் வண்ணம் உண்ணா நோன்பு இருப்பதை ஏற்போம். வாழ்விலிருந்து தீமைகளை வேரோடு பிடுங்கி எறிவதிலும், தேவையிலிருப்பவருக்கும் அடுத்திருப்பவருக்கும் பிறரன்புச் செயல்கள் ஆற்றுவதிலும் மனம் தளராது இருப்போம் என்றும் அன்பு, நீதி மற்றும் தோழமை உணர்வோடு ஆற்றப்படும் நன்மைத்தனம் ஒரு முறை ஆற்றுவதோடு நிறுத்திவிடப்படாமல் ஒவ்வொரு நாளும் இடம் பெற வேண்டும் என்றும் திருத்தந்தை தனது செய்தியிலே வலி யுறுத்திக் கூறியுள்ளார்.



**நன்மை செய்வதில் மனம் தளராது இருப்போம்.**

உண்ணா நோன்பால் தயாரிக்கப்படும் நிலம் இறைவேண்டலால் நீரூற்றப்பட்டு பிறரன்பால் வளப்படுத்தப்படவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது தவக்காலச் செய்தியின் இறுதியிலே கூறியுள்ளார். நன்மை செய்வதில் மனம் தளராது இருப்போம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். அத்தோடு தற்போது உலகினர் அனைவரும் எதிர்கொண்டு வரும் கொரோனா பெருந்தொற்றுத் தனிப்பட்ட மற்றும் சமுதாய அளவில் நாம் எவ்வளவு பலவீனர்கள் என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளது என்பதை நினைவுபடுத்தி கடவுளில் நம்பிக்கை வைப்பதால் கிடைக்கும் ஆறுதலை அனுபவிக்க தவக்காலம் உதவும் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

அர்த்தமுள்ள ஆன்மீகம் 09

# பரிந்துரைச் செபம்

பாகம் - 2

**பி**றருக்காகப் பரிந்துரைப்பது பற்றி விவிலியத்தில் பல இடங்களில் கூறப்பட்டிருக்கின்றது. திருத்தூதர் யாக்கோப்பு 5:16ல் "ஒருவர் மற்றவருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். அப்பொழுது குணமடைவீர்கள்" என்று கூறுகிறார். பவுலடியார் எபேசி 6:18-20ல் "இறைமக்கள் அனைவருக்காகவும் மன்றாடுங்கள்" எனக்காகவும் மன்றாடுங்கள்" என்று கூறுகிறார். மீண்டும் 1 திமோ 2:2 ல் "தொல்லையின்றி அமைதியோடு வாழ அரசர்களுக்காகவும், உயர் நிலையிலுள்ள எல்லா மனிதர்களுக்காகவும் மன்றாடுங்கள். இதுவே நம் மீட்பராகிய கடவுளின்முன் சிறந்ததும் ஏற்புடையதுமாகும்" என்று கூறுகிறார்.

**பிறருக்காகப் பரிந்துரைப்பது எப்படி?**

விண்ணகத்தில் இருக்கும் நமது அன்புத் தந்தையோடு தொடர்புகொள்ளும் அருமைச் சாதனம் செபம். தனக்கு ஏற்ற விதத்தில் பயனுள்ள விதத்தில் எவ்வாறு செபிக்கவேண்டும் என்று விவிலியத்தில் கூறுகிறார் இறைவன்.

**வல்லமையுள்ள பரிந்துரைத்தலுக்கு விவிலியம் கூறும் சில வழிமுறைகளை இங்கே குறிப்பிடுகிறேன் :**

◆ உள்ளத்திலிருந்து உணர்வோடும் இதயசுத்தியோடும் பரிந்துரையுங்கள்.

◆ அடிக்கடி பிறருக்காகப் பரிந்துரைக்க வேண்டும். மத் 6:11 "இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்". எமது தேவைகளுக்காகவும் மற்றவர்களின் தேவைகளுக்காகவும் ஒவ்வொரு நாளும் மன்றாட வேண்டும்.

◆ எமக்கு எது எது தேவையென்று இறைவனுக்குத் தெரியும். எனினும் எமது தேவைகள் எவை எவை என்று குறிப்பிட்டுச் சொல்லுவது நன்று. எவையெல்லாம் எமது முக்கிய தேவைகள் என்று நாம் குறிப்பிட்டுச் சொல்லுவதை இறைவன் விரும்புகின்றார். தி. பா 141:2ல் குறிப்பிடுவதுபோல "தூபம் போல் என் மன்றாட்டு உம் திருமுன் ஏற்றுக்கொள்ளப்படுவதாக".

◆ நம்பிக்கையோடு பரிந்துரையுங்கள்.

நம்பிக்கை பற்றி விவிலியம் முழுவதும் பரவலாகக் கூறப்பட்டுள்ளது. எது நமக்கு நல்லது, அவசியமானது என்று நமது அன்புத் தந்தையாகிய இறைவனுக்குத் தொியும். அதை அவருக்கு ஏற்ற விதத்தில் நிச்சயம் தருவார் என்ற ஆழமான நம்பிக்கை நமக்குத் தேவை. மத் 15:22 குறிப்பிடும் கானானியப் பெண்ணின் நம்பிக்கை, அதுபோன்ற பல நிகழ்வுகளில் நாம் காண்கிறோம். இயேசு குணமளிக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் "உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கின்றது" என்றே விவிலியம் குறிப்பிடுகிறது.

◆ உண்மை அன்புடன் பரிந்துரையுங்கள்.

நாம் பரிந்துரைக்க வேண்டியவர்கள் உண்மையான தேவைகளில் உள்ளவர்கள். இறைவன் அவர்கள் ஒவ்வொருவரையும் ஆழமாக அன்பு செய்கிறார். அதேபோல் நாமும் அவஉகளை அன்புசெய்வதை விரும்புகிறார். இறைவனின் அன்பு தன்னலமற்றதாய் உள்ளதுபோல் எமது அன்பும் தன்னலமற்றதாய் இருக்கவேண்டும்.

◆ ஆர்வத்துடன் பரிந்துரையுங்கள் :

திருத்தூதர் யாக்கோப்பு 5:16ல் "நேர்மையாளருடைய வல்லமைமிக்க மன்றாட்டு பயன் விளைவிக்கும்" என்று கூறுகிறார்.

**மற்றவர்களுக்கு உதவிசெய்யவேண்டும் என்ற ஆசையோடு பரிந்துரையுங்கள் :**

உடல் சார்ந்த உதவிகள், ஊக்கமூட்டும் வார்த்தைகள், அன்பான வாழ்த்துமடல், தொலைபேசி அழைப்பு, நேரடிச் சந்திப்பு போன்றவை இவற்றுள் அடங்கும். உமக்காக நான் மன்றாடுகிறேன் என்று கூறுவது அவரை உற்சாகப்படுத்தும் என்றால் அவ்வாறு கூறுவதில் தவறில்லை.

◆ நோன்பிருந்து பரிந்துரையுங்கள்.

ஒருவரின் நிலமை மிகவும் காத்திர மான தாய் இருந்தால் நோன்பிருந்து பரிந்துரைப்பது விரும்பத்தக்கது.



"அனைவருக்காகவும் மன்றாடுங்கள்
இறைவனிடம் வேண்டுங்கள்
பரிந்துபேசுங்கள்
நன்றி செலுத்துங்கள்"

அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

**முன்னுதாரணமான பரிந்துரை**

செபத்தை தானியேல் ஆகமம் 9ம் அதிகாரத்தில் நாம் காணலாம். இதில் பரிந்துரையின் அனைத்துப் பண்புகளும் அடங்கியுள்ளன :

வசனம் 2 இறைவார்த்தையின்படி ; 3 ஆர்வமுள்ளதாக 4 தன்னல மறுப்புள்ளதாக; 5 இறைமக்களோடு தன்னலமின்றித் தம்மை அடையாளப்படுத்தி; 5-15 பாவ அறிக்கையால் உறுதிப்படுத்தி; 4,7,9,15 இறைவனின் பண்புகளுக்குப் பணிந்து; 16-19 இறை மகிமையே இறுதி இலக்காகி.

**பரிந்துரையின் பலன்கள் :**

பரிந்துரை வழியாக இறைவார்த்தையை நமதாக்குவதால் நாம் உருமாற்றம் பெறுகின்றோம். பரிந்துரை நமது நம்பிக்கை, எதிர்நோக்கு என்பவற்றைப் புதுப்பிக்கிறது. நமக்கு வாழ்வளிக்கிறது. பரிந்துரை பலனளிக்கும்போது பரிந்துரைப்பவர் இறைவனின் கருவியாகச் செயற்படுவதைக் காணமுடியும்.

பரிந்துரையின் வழியாக நமக்கும் பல பயன்கள் உண்டு. நான் என்ற குறுகிய வேலி சிதைகிறது. நம் வானங்கள் விரிகின்றன, தன்னலம் மறைகிறது. நலிந்தவரின் துன்பம் நம்மையும் தொடுகிறது. நம் இதய வீட்டில் எல்லோரும் குடிபுகுவதால் நாமே ஓர் உலகமாகிறோம்.

●

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.

- *அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

10

### அத்தியாயம் 5



**5.2 23ம் அருளப்பர் திருத்தந்தையாகத் தெரிவானது திரு அவைகளுக்கு ஓர் புதிய பெந்தக்கோஸ்து!**

நீண்ட காலம் பாப்பரசராக இருந்த 12ஆம் பத்திநாதரைத் தொடர்ந்து, 1958 இல் 23 ஆம் அருளப்பர், பாப்பரசராகத் தெரியப்பட்டார். வயதில் முதிர்ந்தவர், குறுகிய காலம் தான் பாப்பரசராகப் பணி புரிவார் என்று உலகம் கணித்தது. ஆனால் 1959ஆம் ஆண்டிலேயே, மூத்த கருதினால் ரிசெறனுடன் (Card. Tisserant) வத்திக்கான் தோட்டத்திலே நடந்து கொண்டிருக்கும் பொழுது, ஆவியின் ஏவுதலினால் தூண்டப்பட்டு, தமது அந்தரங்க நோக்கத்தைக் கருதினால் ரிசெறானிடம் (Card. Tisserant) சடுதியாகச் சொன்னார் - ஒரு புதிய சங்கத்தைக் கூட்டுவோம் இதைக் கேட்ட கருதினால் திகைத்துப் போனார்! ஏன்?

1958ஆம் ஆண்டு ஓர் வயதில் முதிர்ந்த, உலக கீர்த்தி பெறாத ஒரு கருதினால் றொன்கல்லியை (Card. Angelo Roncalli), ஆகக் கூடியது 5 வருடங்கள் பாப்பரசராகப் பணியாற்றத் தேர்ந்து கொண்டோமே, கடந்த 100 வருடங்களாக நடைபெறாத சங்கத்தை எப்படி இவர் நடத்துவார்! என்பதே அவரின் வியப்புக்குக் காரணம்.

ஆனால் திருத்தந்தை ஆம் ஓர் உலகத் திருஅவையின் சங்கம் (world ecumenical council) என்றார். இதை 1960 தை 25அம் திகதி, புனித பவுலடியார் மனம் திரும்பிய விழாவை உரோமையிலுள்ள பவுலடியார் சின்னப்பர் பேராலயத்தில் கொண்டாடியபொழுது, உத்தி யோகபூர்வமாகக் கருதினால்களின் முன்னிலையில் அறிவித்தார்.

அவருடைய நோக்கத்திற்கு இந் நாளின் விழாவும் மிகப் பொருத்தமாயிற்று. ஏனெனில் அதற்கு 2 முக்கிய காரணங்கள் இருந்தன.

1) யூதேயாவிலே ஆரம்பிக்கப்பட்ட திருஅவை, பிற இனத்தாரின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படும் புனித பவுலடிகளின் மனமாற்றமும், அதன் பின் அவர் திருஅவையில் ஏற்படுத்திய மாற்றமும், விசேடமாக கி.பி. 49ஆம் ஆண்டு ஜெருசலேமில் நடந்த முதல் அப்போஸ்தலர் சங்கத்தில் யூத கிறிஸ்தவத்திலிருந்த விருத்தசேதனக் கடமை பிற இனத்தாருக்கு நீக்கப்பட்டு, கிறிஸ்தவம் உலகத்தில் அனைவரும் ஏற்கக்கூடிய மதமாக ( Jewish Christianity opened itself to the non-jews of the world – universal Christianity) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2) ஜனவரி 25இல் கிறிஸ்தவ ஒற்றுமைக்காகச் செபிக்கும் வாரத்தின் முடிவு (octave of prayer for Christian unity). கூடவிருக்கும் சங்கம் பாப்பரசரின் நோக்கில் கிறிஸ்தவ ஒற்றுமையை ஊக்குவிக்க வேண்டும் என விரும்பினார்.

ஆகையினால் உலகளாவிய ஆயர்களின் சங்கமாகவும், கிறிஸ்தவ ஒற்றுமையை ஊக்குவிக்கும் சங்கமாகவுமே இச்சங்கம் கூட்டப்பட்டது

கி.பி. 49ஆம் ஆண்டில் ஜெருசலேமில் நடந்தேறிய முதல் சங்கத்தின் பின் 20 சங்கங்கள் நடந்தேறி இருக்கின்றன. இவைகள் அனேகமாகத் திருஅவையின் விசுவாசத்திற்கும் ஒழுங்கிற்கும் முரணான பிரச்சினைகளைத் தீர்க்க, ஐரோப்பியத் திருஅவை ஆயர்களின் சங்கங்களாகவே இருந்தன.

ஆனால் மூன்று வருட ஆயத்தத்தின் பின், 1962ஆம் ஆண்டு ஒக்ரோபர் 11ஆம் திகதி இச்சங்கத்தை 2500 உலக ஆயர்கள் இறையியலாளர் பங்கெடுக்க ஆடம்பரமாகத் திறந்து வைத்ததை, நான் நேரடியாகக் கண்டு மகிழ்ந்தேன். இச்சங்கம் 1965 டிசெ. 8 இல் முடியும் வரை, சங்கத்தின் நடவடிக்கைகளை ஆர்வத்துடன் கூர்மையாக அவதானிக்கும் பாக்கியத்தை இறைவனிடமிருந்து பெற்றேன்.

**5.3 திருஅவைகளை, அவைகளின் சூழ்நிலைக்கு ஏற்ப, சீர்திருத்தம் செய்ய, இச்சங்கம் வழி திறந்தது.**

இச்சங்கமே ஐரோப்பிய கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, ஆசிய ஆபிரிக்க தென் அமெரிக்க நாட்டிலுள்ள இளம் கிறிஸ்தவ திருஅவைகளுக்கும் கிடைத்த பெரும் கொடையாகும்.

2ஆம் உலக யுத்தத்தை (1939-44) தொடர்ந்து, ஐரோப்பிய மக்களும், அவர்களின் திருஅவைகளும் பல பின் அடைவுகளையும் அழிவுகளையும் தாண்டி, மீளவும் எழுந்து நிற்க பல முயற்சிகள் எடுக்கப்பட்ட காலம். ஐரோப்பிய திருஅவைகளுக்குள்ளும் 4 புதுப்பித் தல் இயக்கங்கள் தோன்றியிருந்தன. அவைகள் விவிலிய, வழிபாட்டு, பொது நிலையினர், கிறிஸ்தவ ஒற்றுமை இயக்கங்களாகும் (biblical, liturgical, lay, ecumenical renewal movements) இவைகளின் ஊக்குவிப்பாளராகச் செயற்பட்ட இறையியலாளர்களும் ஆயர்களும் இச்சங்கத்திற்கு முந்திய ஆண்டுகளில் பல செயற்குழுக் கூட்டங்களைக் கூட்டிப் பல ஏடுகளைத் தயாரித்தனர்.

ஆனால் ஐரோப்பியர் அல்லாதவர்களின் திரு அவைகளுக்கு இச்சங்கம் மறு பிறப்பிற்கான சந்தர்ப்பமாயிற்று.( Rebirth of churches) 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய மிசனரிகள் தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசிய நாடுகளில், மறைபரப்புப் பணி (missionary activity) என்ற தலைப்பில் மேற் கொண்ட முயற்சிகள் ஐரோப்பிய சூழலில் வளர்ந்த திரு அவையை அப்படியே அந்நிய சூழலிலும் மாற்று நடுகை செய்தனர் (transplantation). இப்புதிய கண்டங்களின் பண்பாடு மதங்கள் அனைத்தும் மனித மீட்புடன் தொடர்பில்லாத வைகளாகவே கருதப்பட்டன.

(தொடரும்...)




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(ரவி, மன்னார்)*

**கே: சிலருக்குச் சுற்றி வளைத்துப் பேசுவதுதான் பிடிக்கின்றது! நேரடியாகப் பேசுவதை விரும்புவதில்லை! என்ன செய்யலாமென ஆலோசனை கூறமுடியுமா?**

**ப:** ரவி, ஒரு சம்பவத்தைச் சொல்லுகின்றேன், கவனமாகக் கேளுங்கள்! மனைவி தன் கணவனை வீட்டில் விட்டு விட்டு வெளியூர் போயிருந்தாள். போகும் போது அவளின் செல்லப் பிராணியான பூனையைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டுச் சென்றிருந்தாள். இரண்டு நாட்கள் கழித்து அலைபேசியில் பூனையைப் பற்றி விசாரித்தாள். கணவன், 'இன்றைக்குக் காலையில் உன்னுடைய பூனை மாடியிலிருந்து விழுந்து இறந்து விட்டது!" என்றான். அவளோ அழுது புலம்பி, "என்ன, இவ்வளவு பெரிய சோகத்தை நீங்கள் சர்வ சாதாரணமாகச் சொல்லிமுடித்து விட்டீர்கள்! இவ்வாறான சீரியசான விடயங்களைக் கூறும்போது 'இன்றைக்கு, பூனை மொட்டை மாடியில் விளையாடியதென்று சொல்லியிருக்கணும்! நாளைக்கு, அது கால்தவறி மாடியிலிருந்து விழுந்துவிட்டது என்று சொல்லணும்! அதற்கு அடுத்த நாள், அடி பலமாகப் பட்டதால பூனை செத்துப் போய்விட்டதென்று சொல்லியிருக்கணும்!" என்றாள். அனைத்தையும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த கணவனிடம் அவள், "சரி அது இருக்கட்டும், அம்மா எப்படி இருக்கிறாங்க?" எனக் கேட்டதற்கு அவன், 'இற்றைக்குத்தான் மொட்டை மாடியில் விளையாடிக்கொண்டு இருக்கிறா!' என்றானாம்.

*(சசி, யாழ்ப்பாணம்)*

**கே: எத்தனை வளங்களைக் கொண்ட நம் நாடு ஏன் இத்தனை இடர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது?**

**ப:** சசி, நாட்டு நலனில் அக்கறைகொண்ட நான்கு தலைவர்கள் இருந்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது! நாட்டைச் சூறையாடும் நரிகள் அதிகரித்து விட்டதால் நாடு நலிந்து மெலிந்து நலனிழந்து பொலிவிழந்து போய்க்கொண்டிருகின்றது!

*(சுதா, மன்னார்)*

**கே: 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கையை நிலைநாட்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. இந்த நாட்களில் 'ஒரே நாடு ஒரே சட்டம்' பற்றி யாரும் பேசுவதாகத் தெரியவில்லையே! ஏனோ?**

**ப:** சுதா, அண்மையில் நம் நாட்டில் நடந்தேறிக் கொண்டிருக்கும் தற்போதைய மின்வெட்டு நிலைமைகளைக் கருத்தில் கொண்டு ஒரு வாசகத்தை ஒருவர் எழுதியிருந்தார்: 'ஒரே நாடு ஒரே இருட்டு' என இருந்தது. நிலைமை இவ்வாறாக இருப்பதால் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டவர்களே அதனை மறந்துவிட்டார்களோ தெரியவில்லை!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: ரஷ்யா உக்ரேன் போர் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** ஆனந்தன், நரி சுரியில் அகப்பட்டது போல உலக நாடுகள் கொரோனாப் பிடியிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கும் நிலையில் ரஷ்ய - உக்ரேன் போர் அந்நாடுகளை மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்தையுமே பாதிக்கப் போகின்றது! என்ன செய்வது? வெறிபிடித்தவர்களின் சிந்தனையாலும் செயற்பாட்டாலும்தான் இப்பேர்ப்பட்ட துயரங்களைச் சந்திக்க வேண்டி இருக்கின்றது! இவர்களின் வெறியாட்டத்திற்கு சாதாரண அப்பாவி மக்கள் பலியாகுவதுதான் பெரும் பரிதாபம்! திருத்தந்தை பிரான்சிஸ், இது குறித்துத் தமது கரிசனையை வெளிப்படுத்தியபோது மூடத்தனத்தின் போரிலிருந்து உலகைப் பாதுகாக்க அமைதியின் அரசியாகிய மரியன்னையிடம் மன்றாடுங்களென அழைப்பு விடுத்திருக்கின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(அன்ரன், யாழ்ப்பாணம்)

**கே: டொலர் இல்லை, டீசல் இல்லை, உரம் இல்லை, தொழில் இல்லை, மின்சாரம் இல்லை! இவற்றுடன் வறுமை ஒரு பக்கம், பொருட்களின் விலையேற்றம் இன்னொரு பக்கம்! இந்நிலை தொடருமானால் நிலைமை என்னாகுமோ!?**

**ப:** அன்ரன், குடும்பமாகச் சேந்து நாட்டைக் குட்டிச்சுவர் ஆக்கிப் போடுவாங்கள் எண்டு எங்கட அப்பு அப்பவே சொல்லுறவர்! உங்களின்ர கேள்விக்கு என்ர அப்புவின்ர ஞாபகம்தான் வருகுது!

*(ராஜன், யாழ்ப்பாணம்)*

**கே: இலங்கை ஆயர்கள் பேரவை 24.02.2022 அன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், " ஈஸ்ரர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் தவறியமை குறித்து இலங்கை ஆயர்கள் பேரவை அதிர்ச்சியடைந்துள்ளது. தாமதம் மட்டுமன்றி உண்மையைமறைக்கவும், படுகொலையை அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தவும், பிரச்சினைகளைச் சிக்கலாக்கவும் முயற்சிகள் நடப்பதாகத் தோன்றுவதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி சர்வதேச உதவியை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை" எனக் கூறியுள்ளது. நான் தெரியாமல்தான் கேட்கிறேன்: வடகிழக்கில் தமிழ்மக்கள் 1980களில் இருந்து இத்தனை ஆண்டுகளாகத் துன்புற்று (அரசுக்கெதிராகப் போராடி) 2009ம் ஆண்டில் ஆயிரக்கணக்காக வன்னியில் கொல்லப்பட்டதோடு, ஆயுதப்போர் முடிவுக்கு வந்து 12 ஆண்டுகள் கடந்தும் எந்தவிதமான அரசியல் தீர்வையும் முன்வைக்காது சர்வதேசத்தை ஏமாற்றிவரும் இலங்கை அரசை இனிமேலும் நம்பாமல் சர்வதேசம் தலையிடவேண்டும் எனத் தமிழ்மக்கள் பல தடவைகள் நீதிகேட்டு நின்ற போது, 'உள்நாட்டுப் பிரச்சினையை உள்நாட்டுப் பொறிமுறைகளுக்குள் தீர்த்துக்கொள்ளலாம்! சர்வதேசம் இதில் தலையிடவேண்டிய தேவையோ அவசியமோ இல்ல!' எனக் கொழும்புப் பேராயர் காடினல் மல்கம் ரஞ்சித் பல தடவைகள் கூறிவந்திருக்கின்றார். இப்போது அவரும் இலங்கை ஆயர் பேரவையும் சர்வதேசத்தை நாடி நிற்கின்றார்கள்! ஈஸ்ரர் தாக்குதலில் அநியாயமாகக் கொல்லப்பட்ட மக்களுக்காக ஆயர்கள் நீதிகோரி நிற்பது சரியான நிலைப்பாடுதான்! ஆனால், வடகிழக்கு மக்கள் ஆண்டாண்டு காலமாகக் கொல்லப்பட்டு வந்தமைக்கும், தொடர்ந்து இவர்களுக்கான உரிமைகளைத் தர மறுப்பதற்கும் அரசு மட்டில் ஆயர்களின் நிலைப்பாடு என்ன? இரண்டாவது, வடகிழக்கு மக்களுக்கு எதிரான வன்கொடுமையும் இன அழிப்பும் நடந்தது குறித்து ஆயர்கள் சர்வதேசத்திடம் நீதி கோராதது ஏன்? இவற்றுக்கு உங்கள் பதில் என்ன? தயவுசெய்து கேள்வி பெரிதென்று கேள்வியைச் சுருக்கிவிடாதீர்கள் என மிகவும் வினயமாக வேண்டுகின்றேன்.**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

**ப:** ராஜன், உங்களது கேள்வியை நான் சுருக்கவில்லை. நீங்கள் அனுப்பிய கேள்வியை அப்படியே பிரசுரித்திருக்கின்றேன். மேலும், பலரும் மிக நீண்ட காலமாகக் கேட்கும் கேள்விக்கு அல்லது கேள்விகளுக்கு நீங்கள் உருவம் கொடுத்திருக்கின்றீர்கள். நிற்க, இலங்கை ஆயர் பேரவையின் நிலைப்பாட்டினை எடுத்துக் கூற நான் இலங்கை ஆயர் பேரவையின் பிரதிநிதியோ அல்லது அதன் தொடர்பாளரோ அல்ல. அதனால் அவர்களது நிலைப்பாட்டினை நான் கூறமுடியாது! ஆனால், உங்கள் கேள்விகள் நியாயமானவை என்பதை மட்டும் என் மனச்சான்று உறுதிப்படுத்துகின்றது. அதனால், கத்தோலிக்கத் திருஅவையாக, ஆயர் பேரவையாகச் சிந்தித்துப் பதில்காண வேண்டிய கேள்விகள் உங்களுடைய கேள்விகள்! மேலும், ஒரு விடயத்தை உறுதியாகத் தெரிவிக்கலாம் என நினைக்கின்றேன்: அதாவது, உங்களைப் போன்றவர்களின் கேள்விகளை ஒரு அமைப்பின் ஊடாகவோ அல்லது தனிநபர் பெயரிலோ இலங்கை ஆயர் பேரவைக்கு அனுப்பிவைத்தால் அதற்குத் தார்மீகப் பதில் கொடுப்பது அவர்களின் கடமையும் பொறுப்புமாக இருக்கும்! நிற்க, இவ்விடத்தில்தான் முன்னாள் மன்னார் ஆயர் அமரர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களை நினைவுகூர வேண்டி இருக்கின்றது! துன்புறும் மக்களின் குரலாக நின்று உண்மைகளை உலகறியச் செய்தார். இவர் போன்ற மந்தைகளின் மணம் சுமந்த தலைவர் - தலைமை உருவாக வேண்டும்!

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கே: 'கூட்டொருங்கியக்கத் திருஅவை' பற்றி நிறையப் பேசப்பட்டது. இப்போது அதுபற்றி ஒன்றையும் காணவில்லை! கூட்டொருங்கியக்கம் தொடங்கி முடிவடைந்துவிட்டதா?**

**ப:** என்ன யோசப் அண்ண! 'கூட்டொருங்கியக்கத் திருஅவை'ப் பயணத்தின் பணிகள் இப்போதுதான் முதற்கட்ட நிலையை அடைந்திருக்கின்றது! ஆரம்பித்து ஓடத் தொடங்கியிருக்கும் வேளையில் முடிந்து விட்டதா எனக் கேட்கின்றீர்கள்! ஏன் களைத்து விட்டீர்களா?




### யாழ்ப்பாணத்தில் திருக்குடும்ப சபைக் கன்னியரின் பணி ஆரம்பம்

**சிறுவர் காப்பகங்கள்**

(முன்னர் இவைகள் அனாதை இல்லங்கள் என்றும் இங்கு வைத்துப் பராமரிக்கப்பட்டுவோர் அனாதைகள் என்றும் அழைக்கப்பட்டு வந்தார்கள்)

இக்காலத்தில் கொலரா போன்ற பலரைக் காவு கொண்ட நோய்களாலூம் மற்றும் பல்வேறு காரணங்களினாலும் பெற்றோரை இழந்த பிள்ளைகளையும் மற்றும் விதவைகளையும் பராமரிக்கக் கத்தோலிக்க திருஅவை தனது முதன்மைப்பணியாகக் கருதிவந்துள்ளது.

1859,60ம் ஆண்டுகளில் பொன்ஜீன் அடிகள் பெற்றோர் இல்லாத பிள்ளைகளுக்கான காப்பகங்களுக்கு அடித்தளமிட்டார். பெற்றோரில்லாத பிள்ளைகளுக்கும் பராமரிப்பில்லாத விதவைகள் போன்றோருக்கும் ஒவ்வொரு பங்கிலும் அங்குள்ள பங்குத்தந்தையே ஒரு தாயைப்போல, தந்தையைப்போல அவர்களைப்பராமரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. முறைப்படியான பெற்றோரின், பராமரிப்பின்றியிருந்த பிள்ளைகளுக்கான காப்பகங்கள் யாழ்ப்பாணத்தில் 1861ம் ஆண்டு தான் முறைப்படி ஆரம்பிக்கப்பட்டது. முதலில் ஆயர் இல்லத்தில் உள்ள தோட்டத்தில் 43 ஆண்பிள்ளைகளுக்கான ஒரு பரமரிப்புக்காப்பகம் ஏற்படுத்தப்பட்டது. இதே நாட்களில் 13 பெண்பிள்ளைகள் திருமதி பிளனகன்னின் பராமரிப்பில் விடப்பட்டனர். 1862ம் ஆண்டு திருக்குடும்பக்கன்னியர் சபையில் முதல் கன்னியர் குழு யாழ்ப்பாணம் வந்திறங்கியதும் பெண்பிள்ளைகளின் பராமரிப்பைத் திருக்குடும்பக்கன்னியர்கள் பொறுப்பேற்றனர். 1863ம் ஆண்டு ஆயர் இல்ல வளாகத்தில் இயங்கத்தும் வங்கிய ஆண்பிள்ளைகளது காப்பகம் மேட்டில் லொட்ஜ் (Myrtle Lodge) என்ற திரு. ஜே. பிறைஸ் (J. Price) என்பவருக்குச் சொந்தமான கொழும்புத்துறையிலிருந்த இல்லமும் அதனுடனிருந்த 14 ஏக்கர் தோட்டமும் விலைக்கு வாங்கப்பட்டு அவ்விடத்திற்கு மாற்றப்பட்டது. இதற்குரிய பணத்தைத்திருப்பாலத்துவ சபை வழங்கியிருந்தது. கத்தோலிக்கரில்லாத சிறுவர்கள் தான் இங்கு கூடுதலாகவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. சிறுவர் இல்லப் பராமரிப்புக்கான செலவினத்திலும் கணிசமான அளவு திருப்பாலத்துவ சபையினாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தது.

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

## காவலன் கலசம்

# தற்காலப் பின்னணியில் மனித துன்பம்

## ஓர் விவிலியப் பார்வை .





**முன்னுரை**

இன்றைய காலத்தில் பிரபஞ்சம் முழுவதும் அனுபவிக்கும் பொதுவான ஒரு உணர்வு துன்ப உணர்வு என்றால் மிகையாகாது. துன்பம் என்பது ஒருவகை வலியினால் வரும் சோகமான உணர்ச்சியா கும். இது தோல்வி, நட்டம், இயலாமை என்பவற்றால் உருவாகும் ஓர் உணர்வு. துன்பம் என்னும் நாணயத் தின் மறுபக்கம் இன்பம் என்பது அனுபவ வாக்கு.

மானிட வாழ்வு யதார்த்தமாக முழுமையடைய வேண்டுமாயின் இந்நாணயத்தைச் செல்லுபடிஆக்குவது இன்றியமையாதது. ஆம், அது எம் கையிலே உள்ளது.

**துன்பமின்றி இன்பமில்லை**

இன்பமும் துன்பமும் வாழ்க்கையில் மாறி மாறி வரும் பருவகாலம் போன்றவை. துன்பங்கள் எம்மை வருத்தக் கூடியவை. உடல் ரீதியாகவோ, உள ரீதியா கவோ ஏற்படலாம். இவை அன்றும் இருந்தன. இன் றும் இருக்கின்றன. நாளையும் இருக்க மாட்டாது, என்று கூறுவதற்கு இல்லை . மனிதம், காலம், சூழல்' மாறுபட்டதே ஒளிய கருப்பொருள், அதன் அர்த்தம் மாறுபடவில்லை . புதிய பல முகங்களுடன் எம்மிடையே ஊடறுத்து வியாபித்துள்ளது. ஒரு விடயம் தோன்றும் போது இன்பம், அது மறையும் போது துன்பமாகிவிடும். இன்பமும் துன்பமும் ஒன்றை ஒன்று சமப்படுத்த வந்து போகின்றது. விவேகமுள்ளவர்கள் இன்பத்தினால் குதூ கலிக்கவும் வேண்டாம், துன்பத்தினால் துடிக்கவும் வேண்டாம், என உணர்ந்து இரண்டையும் சமமாக ஏற்கக் கற்றுக்கொள்கின்றனர். இன்பத்தை ஒருவர் விரும்பி நாடுகின்றார். ஆனால் துன்பத்தினை ஒருவ ராலும் தவிர்க்க முடியாது. தன்னுடைய பலத்தினால் ஒரு அற்ப துன்பத்தினைக் கூட தவிர்க்க முடியாதவனாக மனிதன் இருக்கின்றான்.

**விவிலியத்தில் துன்பம்**

துன்பம், உலகலாவிய, மாற்ற முடியாத மனித இயல்பினால் வெறுக்கத்தக்க தொன்றாக அமைந்திருப் பினும் திருவிவிலியம் புதியதொரு நம்பிக்கையூட்டும் அர்த்தத்தைத் துன்பத்திற்குக் கொடுக்கின்றது. புதிய - ஏற்பாட்டாளர் பலர் கொடும் நோயினால் பாதிக்கப்பட்டி ருந்தனர். முடக்குவாதம், கூன், பார்வையிழப்பு, காய்ச் சல், இரத்தப்போக்கு, தொழுநோய், அசுத்த ஆவிக்கு அடிமையாதல் இப்படியாகப் பல நோய்களுக்கு அடிமை யாக இருந்தனர். 12 வயதுச் சிறுமி, இலாசர், நயீன் பட்ட ணத்து கைம் பெண்ணின் மகன் போன்ற பலரை இறப்பு ஆட்கொண்டு கட்டி வைத்திருந்தது. ஆனால் இயேசு இறப்பு என்ற ஆழ்ந்த தூக்கத்திலிருந்து அவர்களை விடுவித்தார். புது வாழ்வு அளித்தார். துன்பம் வாழ்வின் முடிவல்ல தொடர்கதை. நெருப்பில் பொன் புடமிடப்படு வது போல் மானிடரும் சோதனை, துன்பம், எனும் நெருப்பில் புடமிடப்பட்டு, தூய்மையாக்கப்பட்டு ஒளி வீசு கின்றார்கள். துன்பங்கள் எக் காலத்துக்குமுரியவை. இக்காலத்துத் துன்பங்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்ல றைகளாக, நீறு பூத்த நெருப்பாக, அனல் கக்கும் எரிமலை யாக, கோபம் கொண்ட சுனாமிப் பேரலையாக கொள்ளை நோய் கொரோனாவாக நேரடியாகவும் மறைமுகமாக வும் எம்மைச் சந்திக்கின்றன. இன்ப துன்பங்களுக்கான அடிப்படைக் காரணங்களை நோக்குவோம்.

**அதிகரித்து வரும் இலத்திரனியல் பாவனை**

இலத்திரனியல் பாவனை, தொழில்நுட்பப் புரட்சியால் வளர்ந்து விட்ட தகவல் பரிமாற்றத்தின் பயன்பாடு குறித்து பெருமை பேசும் மனித குலம் அன்பு, பாசம், கருணை, இரக் கம் என்ற மனித நேயப் பண்புகளை மின்னணு வியல் தகவல் சாதனங் களினூடாக இழந்து கொண்டிருக்கின்றது என்பதை மறுக்கின்றதா? நவீன சமூக கலாசார மாற்றம் மனிதத்தை வளர விடாது சாகடித்துக் கொண்டிருக்கின்றது, என்பதற்கு பேஸ்புக், வட்ஸ்அப் போன்ற சமூக வலைத்தளத் தகவல் பரிமாற்றக் கலாசாரம் போதுமான சான்றாக உள்ளது.



அருட்சகோதரி ஞா.இ.சுபாஜினி (தி.கு)

மனிதகுலம் எங்கெல்லாம் வாழ்கிறதோ அங்கெல்லாம் மின்னணுவியல் தகவல் சாதனங்கள் மனித குலத்தோடு ஒட்டிக் காணப்படுகின்றன. இச் சாதனங்களோடு ஒட்டியதாகவே உலகை உள்ளங் கைக்குள் கொண்டு வந்துள்ள இணையப் பாவனையும் உள்ளடக்கப்படுகின்றது, இணையப் பாவனை மனிதத் தேவைகள் பலவற்றை நிறைவேற்றிக் கொண்டிருந் தாலும் அதன் பயன்பாடு மனிதனுக்கு இன்றியமை யாததாக இருந்தாலும் அவற்றின் பக்க விளைவுகளும் அதன் சிவப்புப் பக்கங்களும் பல தீமையான பின் விளை வுகளையும் ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றது. அவற்றில் ஒன்று தான் மனிதத்தை மரணிக்க ச் செய்திருப்பதாகும்.

**இணையத்தளத்தால் ஏற்பட்ட இழிநிலை**

இவ்வாறு அதிகரித்துள்ள இலத்திரனியல் தகவல் பரிமாற்ற சாதனங்களின் பயன்பாடானது பொது வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் பல விரும்பத் தகாத மாற்றங்களை ஏற்படுத்தி, விழுமியங்களையும் மனித நேயத்தையும் இழக்கச் செய்து கொண்டி ருக்கின்றது. தெருவில் இடம்பெறும் விபத்தொன்றில் சிக்கித்தவிக்கும் ஒருவரைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக அவரைப் படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் பதி வேற்றும் மனிதாபிமானமற்ற நிலை உலகளவில் நடந் தேறுவதைக் காணமுடிகின்றது. விளம்பரப்படுத்தக் கூடாத அந்தரங்க, ஆபாச நிகழ்வுகள் பலவற்றை புகைப்படங்களாகவும் காணொளிக் காட்சிகளாகவும் சமூக வலைத்தளங்களில் விளம்பரப்படுத்தப்படுகின்ற அசிங்கமான தன்மையிலிருந்து மனிதத்துவப் பண்புகள் வீழ்ச்சியின் விளிம்பில் தொங்கிக் கொண்டிருப்பதை நோக்க முடிவதோடு மனிதாபிமானம் எந்நிலையில் தற்கால சமூகத்தின் மத்தியில் காணப்படுகின்றது என்பதையும் மலிவான விளம்பரங்களும் தகவல் பரிமாற்றக் கலாசார மோகமும் புடம் போட்டுக் காட்டுகின்றன.

**மனித நேயம் மரணித்துக் கொண்டிருக்கும் நிலை**

மரணித்துக் கொண்டிருக்கும் மனித நேயப் பண்புகள் மனிதனின் மனதை சொல்லினாலோ செய லினாலோ சந்தோஷப்படுத்தினாலே போதும் அது கோடி புண்ணியத்தைக் கிடைக்கச் செய்யும். இறைவனின் அன்பையும் அருளையும் பெறச் செய்யும். அன்னியோன் யம், ஆறுதல், நேர்மறை உணர்வு, இரக்கச் சிந்தனை, கருணை, அன்புடன் நடந்து கொள்ளும் முறை, சமூக அக்கறை என்பவை இருவருக்கிடையில், சமூகங்களுக் கிடையில் வெளிப்படுத்தப்படுமாயின் அவை மனிதத்தை வாழ வைக்கும். இப்பண்புகள் சக உறவுகளுக்கிடையே வெளிப்படையாகப் பகிரப்படும் போது மனங்களின் மனித நேயம் வற்றிப்போகாது, மாறாக இவ்வம்சங்களில் ஏதாவது ஒன்று குறைவடையுமாயின் மனிதத்துவம் வளர்வதற்குப் பதிலாக மெல்ல சாவதற்கு ஆரம்பித்து விடும்.

**மனித நேயமும் கலாசாரமும்**

நாகரிகம் தலைவிரித்தாடும் நகர்ப்புறங்களில் வாழும் சிலருக்கு பக்கத்து வீட்டில் வாழும் நபர்கள் யார் என்று கூடத் தெரிவதில்லை . அவர்களுக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால் உதவுவதற்குக் கூட மனங்கள் இடங் கொடுக்காது. நமக்கு ஏன் இந்த வீண் வம்பு என்ற உள்பாட்டில்தான் மனித நேயம் காணப்படுகின்றது. அனைத்து மதங்களும் கோட்பாடுகளும் மனித நேயச் சிந்தனை களை விதைத்திருக்கின்றன. அவ்வாறு விதைக்கப்பட்டுள்ள நல்ல சிந்தனைகளின் வழியே செயற்பட்டு கிளைகளாகவும், பூக்களாகவும், கனிகளாகவும் காட்சி கொடுப்பது அவரவரது பொறுப்பாகும். ஆனால் அந்தப் பொறுப்புக்கள் நவீன கலாசாரங்களால் மறைக்கப்பட்டு விட்டன.

2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அலையை விட மனிதநேய அலைகள் வேகமாக பாதிக்கப்பட்ட மக் களை நோக்கிச் சென்ற போதிலும் அதிலும் மனிதம் இழந்த செயற்பாடுகள் அரங்கேற்றப்பட்டன. நாட்டில் அடிக்கடி இடம்பெறுகின்ற அனர்த்தங்களின் போது பாதிக் கப்படும் மக்களுக்கான உதவிக்கரங்கள் நீட்டப்படுகின் றன. ஆனால் அவற்றிலும் மனித நேயம் என்ற போர் வையில் திரைமறைவில் விளம்பரங்களும், வியாபாரங் களும் இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இவற்றின் பின்னணியில் சமகால சமூக மாற்றத்திற்கான இலத்திரனியல் தகவல் தொழில்நுட்பப் புரட்சி காரணி யாக அமைந்திருக்கின்றது. இவை மனித நேயத்தை மறக்கச் செய்து கொண்டிருக்கின்றன.

**துன்பமும் Covid கொள்ளை நோயும்**

துன்பம் என்பது நம் வாழ்வியல் எதார்த்தம். மண்ணில் வாழ்வது மனிதருக்குப் போராட்டம் தான். அதிலும் நோய் என்பது சாபக்கேடாகவே கருதப்படு கின்றது. ஊனம், மனநிலைபிறழ்வு, மற்றும் இன்று வரை எதிர்ப்பு மருந்து கண்டு பிடிக்க முடியாத நோய்கள், சாதாரணமாக எல்லோரையும் பாதிக்கும் நோய்கள் மனிதனைப் பல்வேறு காலகட்டங்களில் பீடிக் கின்றது. ஆனாலும் மருத்துவத்துறை அபார வளர்ச்சி யைக் கண்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியால் பல புதிய கண்டு பிடிப்புக்களும் நாள்தோறும் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றது. கண்டுபிடிப்புக்களும், ஆராய்ச்சியும் அதிகரித்ததன் விளைவே "கொரோனா" என்ற கொள்ளை நோய் என்றும் எண்ணத் தோன்று கின்றது. பரிணாம வளர்ச்சி எண்ணற்ற உயிர்களைச் சத்தமின்றி விழுங்கிவிட்டு ஏப்பமிடும் அரக்கன் போல் கொக்கரிக்கின்றது. பூமியின் பல பாகங்களிலும் மக்க ளின் ஊனக் கண்ணீர், பெருமூச்சின் அனல்க்காற்றால் துருவப்பனிகளும் பாறைப்பிளம்புகளால் சமுத்திரத்தின் மட்டத்தை உயர்த்திவிட்டது. அதன் விளைவு வெள்ளப் பெருக்கு. எங்கு ஓடி ஒழிவது என்று எண்ணிய காலம் மாறி வீட்டினுள் தனித்திருப்பதே பாதுகாப்பு என்ற நிலை வந்துவிட்டது. மனிதன் சமூகப் பிராணி. Covid-19 எம்மைத் தனித்தனித் துருவங்களாக வாழத் தூண்டுகின்றது. உண்மையில் இது ஓர் சாபக்கேடு என்றுதான் சொல்ல வேண்டும்.

**மனித நேயமும் சமூக அந்தஸ்தும்**

பணம், பொருள், அறிவு, பதவி, உயர்வு தேடும் வேட்கையில் இறை உணர்வைத் துண்டித்து மனித உறவுகளை மறந்து கலாசார நடைமுறைகளுக்கு விடை கொடுத்து வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வது நேர விர யம், நாகரிகம் இல்லை என்று எண்ணி வேகமாக ஓடிக் கொண்டிருந்த எம்மை, சடுதியாகத் தடுத்து நிறுத்தி மேற்கூறப்பட்டவற்றை நினைக்கக்கூட முடியாது மூலை யில் முடங்கவைத்துள்ளது. மனிதத்தை மதிக்காது இலத்திரனியல் மோகம் கொண்டு வாழ்ந்ததால் அன்றோ நாம் இன்று Covid-19 என்னும் குற்ற வாளிக்கூண்டில் அகப்பட்டு அங்கும் இங்குமாக அலைக் களிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எப்போது இவை ஒழியும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கி றார்கள். இப்படியாகப் பல காரணிகளால் தனிப்பட்ட ஒவ் வொரு மனிதனும் தன்னைத் தானே கேள்விகேட்க வேண்டியவர்களாக உள்ளோம். இப்படியான துன்பங் களின் அடிப்படைக் காரணிகளை நோக்கிய நாம் துன் பத்தின்போது எப்படி வாழ வேண்டும் என நோக்கு வோம்.

**துன்பத்தின் போது நிமிர்ந்து நிற்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.**

"மானிடமகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்பட விருக்கின்றார் அவர்கள் அவரைக் கொலைசெய்வார்கள்"

*(மாற்கு 9:31)*

உன் துன்பங்கள், தனிமையுணர்வு, பயங் கள் பிறரால் நிராகரிக்கப்படும் அனுபவங்கள் என்பவற் றோடும் உன்னால் நிமிர்ந்து நிற்க முடியுமா? என்பது தான் கேள்வி. இத்தகைய உணர்ச்சிகளால் நீ அடித்துச் செல்லப்பட்டு விடும் ஆபத்து உண்டு. ஆனால் உன் சொந்தக் காலில் நிமிர்ந்து நின்று கொண்டே இவற்றை ஏற்று உணர்ந்து கொண்டு வாழ்வதற்கே அழைக்கப் பட்டிருக்கின்றாய். மரியாள் சிலுவையடியில் கொண்டிருந் ததை நினைவு கூர்ந்து கொள். அவர் சிலுவையின் கீழே நின்று கொண்டே தன் துன்பத்தைத் தாங்கிக் கொண்டி ருந்தார்.

பிரபஞ்சத்தின் இறுதிக்கால அழிவு பற்றியும் இறைமகன் மாட்சியோடு வருவதைப்பற்றியும் இயேசு தன் சீடர்களுக்குக் கூறியவற்றை நினைவில் கொள்ளுங் கள்.

(தொடரும்...)

# காவலன் கலசம்

நல்ல தலைவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள். நல்ல குடும்பங்கள், நல்ல சூழல்கள், நல்ல நண்பர்கள் போன்றோரின் வலைப்பின்னலே நல்ல தலைவர்களின் இணையமாகும். சந்தனக் காட்டிற்குள் சென்று எந்தக் குச்சியை உடைத்தாலும் அது நறுமணம் தருவது போல நல்லோர் எங்கிருந்தாலும் என்னசெய்தாலும் அது நன்மை பயக்குவதாகவே அமையும். அவர்களது பேச்சும் மூச்சும் வாழ்வின் வீச்சும் எப்பொழுதும் நன்மை கலந்தே காணப்படும். நல்லாரைக் காண்பதுவும் நல்லார்சொற் கேட்பதுவும் நல்லாரோடு கூடிவாழ்வதுவும் எல்லோராலும் விரும்பப்படும்.

"நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன். நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார். கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டுவிட்டு ஓடிப் போவார். ஏனெனில் அவர் ஆயரும் அல்ல. ஆடுகள் அவருக்குச் சொந்தமும் அல்ல. ஓநாய் ஆடுகளைப் பற்றி இழுத்துக்கொண்டுபோய் மந்தையைச் சிதறடிக்கும். கூலிக்கு மேய்ப்பவருக்கு ஆடுகளைப் பற்றிக் கவலையில்லை"(யோவான் 10:10-13).



## நல்ல தலைவர்கள்

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)

இவ்வாறு இயேசு பேசியது அவரது வாழ்வில் முழுமையாக நிறைவேறியது. அவர் தான் ஒரு நல்ல தலைவன் என்பதைச் சொல்லாலும் செயலாலும் நிரூபித்தார். பரிவன்பு, பரோபகாரம், பகிர்தல், பிறருக்கு உதவி நல்கல், பிறர் சார்பாகத் தன்னைத் தாரை வார்த்துக்கொடுத்தல், விருந்தோம்பல், விவேகம், தர்மம், தியாகம், தாழ்மை, தூய்மை, நன்மை செய்யும் ஆர்வம், நேர்மை, நேரமுகாமைத்துவம், சுயமதிப்பு, சுயகட்டுப்பாடு, மனிதநேயம், மனித மாண்பு, மன்னிப்பு, அனுசரித்துப்போதல் போன்ற பண்புகள் மேலோங்கிக் காணப்படும்.

**தலைமைத்துவத்திற்கான 4 அம்சத்திட்டம்:**

*1. தெய்வீக அழைப்பு:* தெய்வம் விரும்புவதை வாழ்வில் நிறைவேற்ற முனைவதாகும். "எனது விருப்பத்தை நாடாமல் என்னை அனுப்பியவரின் விருப்பத்தையே நாடுகிறேன்" (யோவான்5:30) என்று இயேசு மொழிகின்றார்.

*2. தகைமையுடைமை:* செய்வதில் நன்மைத்தனத்தை வெளிப்படுத்துவதாகும். "தொடர்ந்து இறைவனை வேண்டுங்கள். விழிப்போடும் நன்றியுணர்வோடும் அதில் ஈடுபடுங்கள், உங்கள் பேச்சு இனியதாயும் சுவையுடையதாயும் இருப்பதாக"(கொலோ. 4:4,6) என்று புனித பவுல் கூறுகின்றார்.

*3.பரஸ்பர நம்பிக்கை:* பேதுரு அப்போஸ்தலர் இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை வைத்தவராய் கடல்மீது நடந்தார். சொற்பநேரத்தில் நம்பிக்கை குன்றிவராய் கடலில் மூழ்குகையில் "ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்" என்று கத்தினார் (மத்தேயு 14:30). இயேசு உடனே, தம் கையை நீட்டி அவரைப் பிடித்து, "நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?"என்றார் (மத்தேயு 14:31). "உங்களுக்குக் கடுகளவு நம்பிக்கையிருந்தால் நீங்கள் இம்மலையைப் பார்த்து, "இங்கிருந்து பெயர்ந்து அங்கு போ" எனக் கூறினால் அது பெயர்ந்து போகும். உங்களால் முடியாதது ஒன்றும் இராது என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்"(மத்தேயு 17:20) என்று இயேசு சீடர்களுக்கு நம்பிக்கையளித்தார்.

*4. நற்பண்புடைமை:* "நற்பேறுபெற்றவர் நீரோடையோரம் நடப்பட்ட மரம்போல இருப்பார். பருவகாலத்தில் கனிதந்து என்றும் பசுமையாயிருக்கும் அம்மரத்திற்கு ஒப்பாவார். தான் செய்வதனைத்திலும் வெற்றிபெறுவார்" (திருப்பாடல் 1:3). "நீங்கள் உங்கள் நம்பிக்கையோடு நற்பண்பும் நற்பண்போடு அறிவும் அறிவோடு தன்னடக்கமும் தன்னடக்கத்தோடு மனஉறுதியும் மன உறுதியோடு இறைப்பற்றும் இறைப்பற்றோடு சகோதரநேயமும் சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குமாறு முழு ஆர்வத்தோடு முயற்சி செய்யுங்கள்" (2பேதுரு 1:5-7) என்று புனித பேதுரு நினைவூட்டுகின்றார்.

நல்ல தலைவர் தனது மக்களில் வைப்புச் செய்வதில் கவனம் செலுத்துவார். ஆக்கபூர்வமான முறையில் அவர்களில் அக்கறை எடுத்துச் செயற்படுவார். பணிவிடைத் தலைமைத்துவம் கிறிஸ்துவை, அயலவரை மையப்படுத்தியதாய் மற்றவர்களது நலனை மேம்படுத்துவதாய் அமையும். நல்ல தலைவன் பண ஆசை, பொருளாசை, உடலாசை, உலக ஆசை போன்றவற்றிலிருந்து விடுபட்டு, இறைவனோடு இரண்டறக் கலந்து பேரின்பத்தில் நிலைத்துநிற்பான். அவன் இறைவனிலும் மனிதரிலும் இணைந்திருந்து நிறை மகிழ்வை அனுபவிப்பான்.

**நல்ல தலைவர் இல்லாமையை**
**இல்லாமல் செய்து,**
**எல்லோரையும் நல்லோராக்கும்**
**முயற்சியில் ஈடுபடுவார்.**
**அவர் ஏமாறாது, ஏமாற்றாது, நம்பிக்கை**
**நட்சத்திரமாய் ஒளிருவார்.**



## படித்த மேதை! படிக்காத மேதை!

சிரமப்படாமல் சிகரத்தைத் தொட என்ன வழி? இதுதான் எல்லாருடைய கேள்வியும், குறிப்பாகப் பல இளைய தலைமுறையின் கேள்வி இது! படிக்காமல் அறிவாளியாக முடியாதா? கர்ம வீரர் காமராஜர் என்ன படித்தார்.

அவரைப் படிக்காத மேதை என்று நாம் அழைக்கவில்லையா? புத்தகத்தைச் சுவைக்கத் தெரியாமல் அதைச் சுமையாகக் கருதுபவர்களின் மேதாவிலாசக் கேள்வி இது!

படிக்காமல் அறிவு பெற முடியும்!

மேதையாக முடியும்! மிகமிகக் கடுமையாக உழைத்து, அனுபவக் கசையடிகளைத் தாங்கி முன்னேற முடியும்!

படித்த மேதைகள் பலரோடும் பழகி, உறவாடி, அவர்களது அறிவைக் கேள்வி ஞானத்தால் சேகரித்துப் படிப்படியாகப் படிக்காமலேயே மேதையாக முடியும்.

ஆயிரத்தில் ஒருவர், பல்லாயிரத்தில் ஒருவர் காமராஜரைப் போலப் படிக்காத மேதையாக முடியும்!

படிக்காதவன் மேதையாவது சிரமம்! மிகமிகச் சிரமம்! ஆனால் படித்தவர்கள் எல்லாரும் மேதையாக வாய்ப்பிருக் கிறது. வெற்றிபெற வாய்ப்பிருக்கிறது!

இந்தத் திரைப்படப் பாடல் வரிகளைக் கவனமாகப் பார்ப்போம்

**"படித்ததினால் அறிவு பெற்றோர்**
**ஆயிரம் உண்டு – பாடம்**
**படிக்காத மேதைகளும்**
**பாரினில் உண்டு"**

ஆயிரக்கணக்கில் படித்த அறிவாளிகள்! விரல்விட்டு எண்ணக்கூடிய சில படிக்காத மேதைகள் இதைச் சொந்த அனுபவத்தில் நன்றாய் உணர்ந்தவர் காமராஜர்!

அதனால்தான் அவர் நம் போன்ற கிராமப்புற மக்களின் கல்விக்கு அவ்வளவு ஆழமான அடித்தளம் அமைத்துச் சென்றார்.

படித்து முன்னேறப் போகிறோமா?

படிக்காத மேதையாகப் போவதாகச் சொல்லிக் கொண்டு பேதையாகப் பின்தங்கப் போகிறோமா?

*படிக்காதவர்கள் மேதைகளாக முடியும்!*
*ஆனால் அதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவு. படிக்காதவர் களைவிடப் படித்தவர்களுக்குத்தான் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகம்.*

நன்றி : வாசிப்புக்காதல் - மி.றோயல்

## தொடரும் 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. நே. யூட்தாஸ்

**76. எங்களுடைய மீட்பர் எங்கே பிறந்தார்?**
எங்களுடைய மீட்பர் பெதலகேம் ஊரிலுள்ள மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார்.

**77. எங்களுடைய மீட்பர் எப்போது பிறந்தார்?**
எங்களுடைய மீட்பர் கிறிஸ்மஸ் தினத்தில் பிறந்தார்.

### நம்பிக்கை அறிக்கையின் நான்காம் பிரிவு

**78. நம்பிக்கை அறிக்கையின் நான்காம் பிரிவு என்ன?**
பொந்திய பிலாத்துவின் அதிகாரத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையப்பட்டு இறந்து அடக்கம் செய்யப்பட்டார்.

**79.கிறிஸ்துவின் முதன்மையான பாடுகள் எவை?**
**கிறிஸ்துவின் முதன்மையான பாடுகளாவன:**
- பூங்காவனத்தில் இரத்த வியர்வை சிந்தி கிறிஸ்து அடைந்த பாடுகள்.
- கற்றூணில் கட்டி அடிக்கப்பட்டு முள்முடி தரிக்கப்படுதல்.
- சிலுவை சுமத்தல்,
- ஆடைகள் களையப்படுதல்,
- சிலுவையில் அறையப்படுதல்,
- இரண்டு கள்வர்கள் நடுவில் உயிர் துறத்தல்.

**80. எம் ஆண்டவரின் முதன்மையான துன்பங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**
ஆண்டவரின் முதன்மையான துன்பங்கள் இயேசுக்கிறிஸ்துவின் பாடுகள் என அழைக்கப்படுகின்றன.

**81.எங்கள் மீட்பர் ஏன் பாடுபட்டார்?**
எங்கள் மீட்பர் எங்களுடைய பாவங்களுக்குப் பரிகாரமாகவும் நாங்கள் முடிவில்லா வாழ்வை எமதாக்கிக் கொள்வதற்காகவும் பாடுபட்டார்.

**82.இயேசுக்கிறிஸ்து ஏன் எங்களுடைய மீட்பர் என அழைக்கப்படுகின்றார்?**
அவருடைய விலைமதிப்பில்லாத இரத்தத்தை விலையாகக் கொடுத்து எம்மை மீட்டுக் கொண்டதால் இயேசுக்கிறிஸ்துவை மீட்பரென நாங்கள் அழைக்கின்றோம்.

**83.எங்கள் மீட்பர் எப்போது இறந்தார்?**
எங்கள் மீட்பர் பெரிய வெள்ளியன்று இறந்தார்.

**84. எங்கள் மீட்பர் எங்கே இறந்தார்?**
எங்கள் மீட்பர் கல்வாரி மலையில் இறந்தார்.

**85. ஏன் நாங்கள் சிலுவை அடையாளம் வரைகின்றோம்?**
நாம் சிலுவை அடையாளம் வரைகின்றோம் ஏனென்றால் தூய மூவொரு இறைவனை நினைவு கூர்வதற்காகவும் இறைமகன் எங்களுக்காக சிலுவையில் உயிர் துறந்ததை நினைவு கூர்வதற்காகவும் ஆகும்.

**86. சிலுவை அடையாளம் வரைகின்றபோது எவ்வாறு நாம் தூய மூவொரு இறைவனை நினைவு கூருகின்றோம்?**
சிலுவை அடையாளம் வரையும் போது நாங்கள் உச்சரிக்கும் பின்வரும் வார்த்தைகளினூடாக தூய மூவொரு இறைவனை நினைவுகூருகின்றோம்: "தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே ஆமென்".

**87. கிறிஸ்து எங்களுக்காகச் சிலுவையில் உயிர்நீர்த்தார் என்பதைச் சிலுவை அடையாளம் வரையும் போது எவ்வாறு நாங்கள் நினைவுகூருகின்றோம்?**
கிறிஸ்து எங்களுக்காகச் சிலுவையில் உயிர்நீர்த்தார் என்பதை நாங்கள் எங்களில் போடுகின்ற சிலுவை அடையாளத்தின் வழியாக நினைவுகூருகின்றோம்.

(தொடரும்...)

# காவலன் கலசம்

## வாழ்வியற்றிறன் அபிவிருத்திக் கற்கைநெறி



மனிதத்தை நேசித்து, வீழ்ந்தோரைத் தூக்கிவிடுவோம்! நேராக யோசித்து, புது வாழ்வில் பயணிப்போம்! கூட்டு முயற்சியினை முன்னெடுத்து, குவலயத்தில் சுடர்விடுவோம்! எனும் நோக்கங்களைக்கொண்டு மாற்றம் அறக்கட்டளை அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட வாழ்வியற்றிறன் அபிவிருத்திக் கற்கைநெறி 21 ஆம் திகதி திங்கள் தொடக்கம் 25 ஆம் திகதி வெள்ளி வரை நாவலர் வீதியில் அமைந்துள்ள மாற்றம் அறக்கட்டளை மையத்தில் நடைபெற்றது. இக்கற்கை நெறியில் யாழ். மாவட்டத்திலிருந்து 27 பேரும் வவுனியா, மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்து 13 பேரும் கலந்து பயனடைந்த நிலையில் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள தொடர்பகத்தில் அமலமரித்தியாகிகள் துறவற சபையின் யாழ். மாகாண முதல்வர் அருடபணி  இயூயின் பெனடிக்ற் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி P.J. ஜெபரட்ணம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

## விற்று மகிழும் சிறார்கள்





மண்டைதீவு புனித பேதுருவானவர் முன்பள்ளிச் சிறார்களின் சந்தை நிகழ்வு புனித பேதுருவானவர் முன்பள்ளியில் 20ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. 40 சிறார்கள் பங்கு கொண்ட இச் சந்தை நிகழ்வில் சிறார்களின் பெற்றோர்களும், மற்றும் பங்கு மக்களும் பங்குபற்றியிருந்தார்கள்.

## தர்ம பிரபாஸ்பர விருது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கலைஞர்கள் தேசிய ரீதியாகவும் மறைமாவட்டங்கள் ரீதியாகவும் பல்வேறு துறைகளில் பணியாற்றுபவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். மறைமாவட்டங்கள் ரீதியாக  மறைமாவட்ட சமூகத் தொடர்பு  ஆணைக்குழுக்கள் தமக்கு வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின்படி கலைஞர்களை இவ்விருதுக்காகப் பரிந்துரைத்தார்கள். இவ்வகையில் யாழ். மறைமாவட்டத்திலிருந்து நால்வர் இவ்விருதுகளைப்  பெற்றுக் கொண்டனர். நாடகத்துறையில் இளவாலைப் பங்கைச் சேர்ந்த திரு. செபஸ்தி றொபின்சன் அவர்களுக்கும், வலைப்பாடுப் பங்கைச் சேர்ந்த திருமதி.  தோமாஸ் மரிய கன்னி அவர்களும், பத்திரிகை எழுத்துத்துறையில் யாழ். புனித பேராலய பங்கைச் சேர்ந்த திரு. அலெக்ஸ் அமலரட்ணம் அவர் களும்,  ஓவியம் மற்றும் கணினி வடிவமைப்புத் துறையில் திரு. வெஸ்லி யூட்சன் டிவேரா அவர்களும் இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டார்கள்.  2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்விருது வழங்கும் நிகழ்வு மூன்றாவது தடவையாக இவ்வருடமும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் மறைமாவட்டப் பங்குகள் ரீதியாக பல துறைகளிலும் பணியாற்றும் கலைஞர்களின் பணியின் பெருமைகளை வெளிக் கொணர்வதாகவும் இந்நிகழ்வு அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## உறவுப்பாலத்தில் குருநகர் - அளம்பில் பீடப்பணியாளர்கள்



அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தில் குருநகர் பீடப்பணியாளர்கள் மற்றும் அளம்பில் பீடப்பணியாளர்கள் ஒன்றிணைந்த தலைமைத்துவப் பயிற்சி கடந்த 16,17ஆம் திகதிகளில் நடைபெற்றது. குருநகர்ப் பங்குத்தந்தை அருட்திரு A.J.யாவிஸ் அவர்களின் நெறிப்படுத்தலில் அளம்பில் பங்குத்தந்தை அருட்திரு யூட் அமலதாஸ் அவர்களின் ஒருங்கிணைப்பில்  அருட்திரு நிலான் மற்றும் அருட்திரு எரோனியஸ் ஆகியோரின் வழிகாட்டலில் நடைபெற்ற 2 நாள் வதிவிடத் தலைமைத்துவப் பயிற்சியில் 50ற்கும் மேற்பட்ட பீடப்பணியாளர்கள் கலந்து பயனடைந்தனர்.

## ஈஸ்ரர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையுடன் இணைந்து இலங்கை ஆயர்கள் பேரவை மேற்கூறப்பட்ட விடயத்தை ஏற்க வேண்டிய தன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்துகின்றது. இத்துயரத்தில் பாதிக்கப்பட்டோருடன் இணைந்து எமது கண்ணீருடன் கூடிய வேண்டுதல்களை இலங்கை மாதா, இலங்கையின் அப்போஸ்தலரான புனித ஜோசவ்வாஸ் அடிகளாரின் பரிந்துரைகளினூடாக எல்லாம் வல்ல இறைவனிடமும், நீதியின் - இரக்கத்தின் ஆண்டவரிடமும், மன்றாடிநிற்கின்றோம் என இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் பேரருட்திரு வின்ஸ்டன் S. பெர்னான்டோ ஆண்டகை அவர்களும் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை பொதுச் செயலாளர் பேரருட்திரு J.D. அன்ரனி அவர்களும் ஒப்பமிட்டு இவ் அறிக்கையை வெளியிட்டிருந்தனர்

# வரலாற்றில் ஒரு தலைவர்



## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர்
## ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

(சென்றவாரத் தொடர்ச்சி...)

### ஆயரின் மறைவும் ஆயரின் நினைவும்

மாதகல் புனித யோசேப்பு மகாவித்தியாலயத்தில் இவரது பணியின் நினைவாக இவரது காலத்தில் 1932இல் நிறுவப்பட்டு, இவரது திருநிலைப்படுத்தலைத் தொடர்ந்து இவரது பெயரைத் தாங்கியிருந்த கட்டடத் தொகுதியொன்று 1995இடப்பெயர்வில் பாதிக்கப்பட்டுப் பின்பு புனரமைக்கப்பட்டு 2003.09.17 இல் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

1973இல் காங்கேசன்துறை ஊறணியில் “ஊறணி எமிலியானுஸ் கனிஸ்ட வித்தியாலயம்” ஆரம்பிக்கப்பட்டது. 1882 இல்திரு. வேறாட்பொன்ட்என்னும் கிறிஸ்தவப் போதகரால் ஆரம்பிக்கப்பட்டு 1918 இல் 5ஆம் வகுப்பு வரையும், 1958இல் 10 ஆம் வகுப்பு வரையும் இடம்பெற்ற காங்கேசன்துறை றோ.க.த.க பாடசாலையில் கல்வி கற்ற ஊறணி மக்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்கால வசதி கருதி இவரிடம் விண்ணப்பித்த போது, ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சொந்தமான காணியில் நான்கு பரப்புகள் பாடசாலை கட்டக் கொடுக்கப்பட்டது. பங்குத்தந்தை லியோ துரைசிங்கம் அ.ம.தி.யின் மேற்பார்வையில் கட்டப்பட்ட இப் பாட-சாலை “ஊறணி எமிலியானுஸ் கனிஸ்ட வித்தியாலயம்” என்றே பெயரிடப்பட்டது.

2020 ஜனவரி 19இல் இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி ஆயர் மேதகு தோமஸ் யே செங் நாங் ஆல் “ஓய்வு பெற்ற குருக்களுக்கான ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஞாபகர்த்த இல்லம்” திறந்து வைக்கப்பட்டது. இவரது செயலராக இருந்து மனதறிந்து செயற்பட்ட அருட்பணி. ஜோ.பொ.இ. செல்வராஜாவினால் இது செயலாக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அருட்பணி. ஜோ. பொ.இ. செல்வராஜா பல தேவைகள் காரணமாகக் கொழுப்பு செல்லும் மறைமாவட்ட அருட்பணியாளர்கள் கொழும்பில் தங்கிநின்று தமது தேவைகளைக் கவனிக்கவும் மருந்துவ வசதிகளைப் பெற்று, இளைப்பாறிச் செல்லக்கூடிய இல்லமொன்றை 61, கிறகரீஸ் றோட் பொரல்ல என்னும் முகவரியில் அமைத்தார். இக்காணி ஏற்கெனவே திருச்சிலுவைச் சகோத

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

ரிகள், பெண் பிள்ளைகளுக்கான விடுதியொன்றை அமைக்க எமிலியானுஸ்பிள்ளையின் கோரிக்கையில் கார்டினர் சிற்றம்பலத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டதாகும். தற்செயலாக இது ஆயரவர்களின் வீட்டுக்குப் பின்புறமாகச் சற்றுத் தள்ளி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## இளையோர் காவியம்

நீ எடுத்து வைத்த காலடி
தடைகளுக்கு பேரிடி

உன் வெற்றியின் தேடல்
புதிய ஆண்டில் வாசல்

நீ சுமைகளை இறக்கயல்ல
தாங்குவதற்கு இடம் ஒதுக்கு

உன் வலியில் பிறக்கிற
வழிகளுக்குத் தான் முகவரி

நீ வீழ்ந்த குழியில்
நீந்தி எழ வைப்பது முயற்சி

உன் பயணம் தடைப்படுவதை விட
தடுக்கப்படுவதுதான் கூட

நீ ஏமாந்து போனாலும்
ஏமாற்றம் தருவது விழிப்பு

உன் தோல்வியின் அழுகையில்
கூட இருக்கிறது விளைச்சல்

நீ முகம் கொடுப்பதை விட
முகம் கொடுக்காதபடி ஓடவை சவால்களை

உன் மனோபலம் தான்
வாழ்க்கையினுடைய தளம்

எப்பவும் ஆபாசங்கள் உன்னை
வீழ்த்துகிற யுத்தம்

நீ செல்போன்களுக்குள்
சென்றுவிடக்கூடாது படுகுழியின் பக்கம்

உன் தூரநோக்கு
இளமையின் ஆயுள் காலம்

நீ சாதிப்பதற்கு வயது கட்டுப்பாடு
இல்லாவிட்டாலும்
இளமையின் இரகசியம் சாதனை

உயிரோவியன்

# யாழ் மறைமாவட்ட பங்குகளின் விசேட நிதி சேகரிப்பு - 2021

| இல | பங்கு | திருப் பாலத்துவ தினம் | பரிசுத்த வாரம் | இறை அழைத்தல் தினம் | சுதேச குருக்கள் தினம் | மறைபரப்பு ஞாயிறு | நல்லாயன் தினம | கிறிஸ்மஸ் தினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **யாழ். மறைக்கோட்டம்** | | | | | | | |
| 1. | பேராலயம் | 40,000.00 | 58,200.00 | 41,000.00 | 40,500.00 | 28,000.00 | 56,340.00 | 98,000.00 |
| 2. | குருநகர் | 41,000.00 | 63,000.00 | 51,000.00 | 12,000.00 | 65,550.00 | 53,220.00 | 53,000.00 |
| 3. | அடைக்கல அன்னை ஆலயம் | 3,650.00 | 40,400.00 | 3,150.00 | 2,800.00 | 12,520.00 | 29,550.00 | 60,140.00 |
| 4. | பாஷையூர் | 20,300.00 | 53,000.00 | 17,400.00 | 9,400.00 | 12,000.00 | 22,400.00 | 47,000.00 |
| 5. | நாவாந்துறை | 19,450.00 | 51,000.00 | 16,120.00 | 21,130.00 | 31,150.00 | 36,200.00 | 38,500.00 |
| 6. | பண்டியன்தாழ்வு | 11,260.00 | 13,000.00 | 11,000.00 | 4,300.00 | 3,050.00 | 4,100.00 | 11,350.00 |
| 7. | அஞ்சனந்தாழ்வு | - | - | - | - | - | 5,280.00 | 5,260.00 |
| 8. | கொழும்புத்துறை | 9,500.00 | 12,200.00 | 15,700.00 | 13,500.00 | 5,000.00 | 15,000.00 | 10,000.00 |
| 9. | கொய்யாத்தோட்டம் | 3,730.00 | 15,870.00 | 12,500.00 | 12,000.00 | 14,000.00 | 16,200.00 | 3,000.00 |
| 10. | திருநெல்வேலி | 6,557.00 | 7,270.00 | 4,070.00 | 3,710.00 | - | 7,265.00 | - |
| 11. | கோப்பாய் | 7,500.00 | 21,175.00 | 5,000.00 | 4,063.00 | 5,039.00 | 5,005.00 | 22,490.00 |
| 12. | சுண்டிக்குளி | 12,540.00 | 10,060.00 | 13,120.00 | 14,000.00 | 7,820.00 | 18,490.00 | 22,250.00 |
| 13. | நல்லூர் | - | 5,000.00 | 5,000.00 | 10,000.00 | - | 8,000.00 | 10,700.00 |
| 14. | மணியந்தோட்டம் | 18,000.00 | 59,000.00 | 22,000.00 | 18,000.00 | 13,660.00 | 8,640.00 | 16,206.00 |
| 15. | திரேசாள் ஆலயம்-றக்கா வீதி | 6,340.00 | 14,000.00 | 6,000.00 | - | - | - | - |
| | **தீவக மறைக்கோட்டம்** | | | | | | | |
| 1. | மண்டைதீவு - அல்லைப்பிட்டி | 10,100.00 | 20,100.00 | 10,150.00 | 10,600.00 | 21,300.00 | 25,400.00 | 15,300.00 |
| 2. | கரம்பன் | 2,000.00 | 4,300.00 | 1,800.00 | - | 2,800.00 | 3,200.00 | 5,000.00 |
| 3. | நாரந்தனை | 2,500.00 | 10,000.00 | - | - | 3,000.00 | 3,000.00 | 4,000.00 |
| 4. | ஊர்காவற்துறை | 17,860.00 | 40,200.00 | 19,340.00 | 17,100.00 | 17,192.00 | 16,250.00 | 23,270.00 |
| 5. | நெடுந்தீவு | 1,150.00 | 4,600.00 | 2,250.00 | - | 2,230.00 | 2,000.00 | 6,000.00 |
| 6. | சாட்டி - மண்கும்பான் | 8,960.00 | 9,490.00 | 10,350.00 | 6,700.00 | 5,300.00 | 21,600.00 | 7,000.00 |
| 7. | புங்குடுதீவு | 5,000.00 | 5,000.00 | 4,000.00 | 3,000.00 | 4,000.00 | 15,000.00 | 4,000.00 |
| 8. | எழுவைதீவு | 5,633.00 | 11,881.00 | 11,100.00 | - | - | 13,000.00 | 5,500.00 |
| | **இளவாலை மறைக்கோட்டம்** | | | | | | | |
| 1. | இளவாலை -அன்னம்மாள் ஆலயம் | 9,700.00 | 7,360.00 | 6,890.00 | 8,550.00 | 16,680.00 | 29,900.00 | 16,480.00 |
| 2. | இளவாலை - யாகப்பர் ஆலயம் | - | 21,050.00 | - | - | - | 20,000.00 | 16,000.00 |
| 3. | மாதகல் | 5,150.00 | 8,850.00 | 12,360.00 | 13,450.00 | 17,400.00 | 20,250.00 | 27,060.00 |
| 4. | சில்லாலை | 4,450.00 | 12,280.00 | 8,500.00 | - | 6,800.00 | 14,360.00 | 17,300.00 |
| 5. | பண்டத்தரிப்பு | 4,200.00 | - | - | - | 5,500.00 | 14,200.00 | 6,200.00 |
| 6. | விளான் | 5,930.00 | 25,260.00 | - | 9,240.00 | 5,680.00 | 4,360.00 | 15,300.00 |
| 7. | மானிப்பாய் | 18,000.00 | 31,500.00 | - | 22,500.00 | - | 20,000.00 | 10,000.00 |
| 8. | மாரீசன்கூடல் | 6,000.00 | 12,000.00 | 12,000.00 | 10,000.00 | 7,500.00 | 11,200.00 | 16,000.00 |
| 9. | உரும்பிராய் | 11,300.00 | 10,000.00 | - | 10,250.00 | 11,000.00 | 127,900.00 | 10,260.00 |
| 10. | ஆனைக்கோட்டை | 12,000.00 | 20,000.00 | 9,000.00 | 10,000.00 | 1,000.00 | 15,000.00 | 25,000.00 |
| 11. | குளமங்கால் | 11,100.00 | - | 25,000.00 | - | 21,000.00 | 65,000.00 | 5,000.00 |
| 12. | மல்வம் | 13,040.00 | 10,250.00 | 11,600.00 | - | - | - | - |
| 13. | வலித்தூண்டல் | 3,000.00 | - | - | - | - | - | - |
| 14. | சுன்னாகம் | 15,280.00 | 40,000.00 | 11,630.00 | 11,900.00 | 11,570.00 | 14,310.00 | 30,000.00 |
| 15. | நவாலி | - | - | - | - | 4,500.00 | 124,300.00 | 5,000.00 |
| | **பருத்தித்துறை மறைக்கோட்டம்** | | | | | | | |
| 1. | பருத்தித்துறை | 21,600.00 | 22,120.00 | 13,500.00 | 13,110.00 | 20,200.00 | 30,500.00 | 21,300.00 |
| 2. | தாளையடி | 2,960.00 | 7,020.00 | 4,110.00 | 4,490.00 | 5,550.00 | 5,200.00 | 6,100.00 |
| 3. | அச்சுவேலி | 7,800.00 | 19,800.00 | - | 6,740.00 | 10,350.00 | 14,300.00 | 20,800.00 |
| 4. | கரவெட்டி | 3,500.00 | 6,000.00 | - | 12,000.00 | 8,000.00 | 125,000.00 | - |
| 5. | மிருசுவில் | 8,500.00 | 20,000.00 | 10,000.00 | 7,000.00 | 15,000.00 | 10,000.00 | 5,000.00 |
| 6. | சாவகச்சேரி | 14,500.00 | 18,340.00 | 16,036.00 | 16,175.00 | 12,395.00 | 17,110.00 | 22,270.00 |
| 7. | மணற்காடு | 5,000.00 | 6,000.00 | - | 8,720.00 | 17,120.00 | 8,000.00 | 5,000.00 |
| 8. | சக்கோட்டை | 12,800.00 | 44,000.00 | - | 12,780.00 | 11,370.00 | 19,490.00 | 32,500.00 |
| 9. | பளை, முகமாலை | 5,000.00 | 15,000.00 | 9,000.00 | 9,000.00 | 11,000.00 | 30,000.00 | 13,000.00 |
| 10. | கட்டைக்காடு | 8,990.00 | 14,500.00 | 10,000.00 | - | - | 20,000.00 | 6,000.00 |
| 11. | ஊறணி | 7,500.00 | 7,600.00 | 5,840.00 | 5,100.00 | 4,200.00 | 3,200.00 | 24,600.00 |
| 12. | ஓட்டகப்புலம் | 550.00 | 2,400.00 | 1,480.00 | - | 600.00 | 3,840.00 | 3,450.00 |
| | **கிளிநொச்சி மறைக்கோட்டம்** | | | | | | | |
| 1. | கிளிநொச்சி | 11,500.00 | 44,811.00 | 12,230.00 | 8,000.00 | 5,000.00 | 10,000.00 | 15,000.00 |
| 2. | வலைப்பாடு | 5,190.00 | 10,000.00 | 2,000.00 | 3,000.00 | 5,000.00 | 2,000.00 | 6,000.00 |
| 3. | உருத்திரபுரம் | 5,000.00 | 9,200.00 | 5,300.00 | 4,550.00 | 4,150.00 | 14,950.00 | 12,280.00 |
| 4. | வட்டக்கச்சி | 3,000.00 | 8,000.00 | 2,000.00 | 4,070.00 | 3,500.00 | 5,000.00 | 3,000.00 |
| 5. | அக்கராயன் | 5,200.00 | 15,000.00 | 5,000.00 | - | 5,650.00 | 5,000.00 | 12,650.00 |
| 6. | மல்லாவி | 1,290.00 | 5,000.00 | 850.00 | 1,200.00 | 1,100.00 | 3,820.00 | 5,000.00 |
| 7. | முழங்காவில் | 8,000.00 | 8,000.00 | - | - | 7,000.00 | 6,000.00 | 10,000.00 |
| 8. | குமுழமுனை | 2,500.00 | 4,000.00 | 1,500.00 | 2,000.00 | - | 3,500.00 | 5,150.00 |
| 9. | பூநகரி | 2,500.00 | 5,500.00 | 2,300.00 | 1,900.00 | 1,700.00 | 2,200.00 | 5,100.00 |
| 10. | பரந்தன் | 6,200.00 | 6,000.00 | 8,500.00 | 6,500.00 | 13,000.00 | 6,550.00 | 3,000.00 |
| | **முல்லைத்தீவு மறைக்கோட்டம்** | | | | | | | |
| 1. | முல்லைத்தீவு | 16,100.00 | 37,000.00 | 18,000.00 | - | 25,000.00 | 25,000.00 | 30,000.00 |
| 2. | புதுக்குடியிருப்பு | 16,300.00 | 34,200.00 | 17,200.00 | 9,933.00 | 20,765.00 | 14,775.00 | 20,250.00 |
| 3. | மாங்குளம் | 1,100.00 | 4,190.00 | 1,070.00 | 1,030.00 | - | 1,000.00 | 1,500.00 |
| 4. | இரணைப்பாலை | - | 25,000.00 | - | 13,300.00 | - | - | 15,000.00 |
| 5. | அளம்பில் | 8,000.00 | - | - | - | 6,870.00 | 6,580.00 | 11,292.00 |
| 6. | கூழாமுறிப்பு | 5,100.00 | 4,000.00 | - | - | - | 10,000.00 | 3,500.00 |
| 7. | கொக்கிளாய் | 2,750.00 | 2,200.00 | 2,320.00 | 1,750.00 | 2,550.00 | 2,500.00 | 2,500.00 |
| 8. | உடையார்கட்டு | 2,240.00 | 4,700.00 | - | 1,550.00 | 2,500.00 | 1,100.00 | 3,010.00 |
| 9. | தர்மபுரம் | 4,000.00 | 8,000.00 | - | 4,180.00 | 3,290.00 | 3,200.00 | 5,000.00 |
| 10. | உடுப்புக்குளம் | 2,000.00 | 2,000.00 | 2,000.00 | 5,560.00 | - | 4,700.00 | 7,230.00 |
| 11. | சிலாவத்தை | 5,400.00 | 11,650.00 | 9,450.00 | 5,340.00 | 6,860.00 | - | - |
| 12. | முகத்துவாரம் | - | - | - | - | - | - | - |

அருட்பணி.செ.நேசநாயகம்

நிதிமுகாமையாளர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

# காவலன் கலசம்




கரைவையூர்ச் செல்வம்

### ஈழநாட்டில் காலடி

ஈழநாட்டில் போர்த்துக்கேயரின் ஆட்சியை ஒழித்து, ஒல்லாந்தர் ஆட்சிப்பீடம் ஏறினார்கள். ஏனைய வர்கள் கத்தோலிக்கரைத் துன்புறுத்தினர், வருத்தினர். கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாகக் கத்தோலிக்கக் குருக்கள் ஈழநாட்டில் பணிபுரிய முடியாத நிலை. 1687ம் ஆண்டு யோசவ் வாஸ் இந்தியாவிலிருந்து ஈழநாடு வந்து கடுமையான சூழலில் துணிவான பணிசெய்து கத்தோலிக்கத்தை ஏதோ ஒரு வகையில் காப்பாற்றினார். மிதக்க வைத்தார்.

1806 இல் பிரித்தானிய ஆட்சியில் மத சுதந்திரம் நிலவியது. இந்தச் சூழலில் தான் ஆயர் பெற்றகீனி குருக்களைத் தேடி ஐரோப்பா சென்று, பின்னர் இயூஜின் டி மசனெட் அவர்களைச் சந்தித்தார். சொல்லிய சொல்லைக் காப்பாற்றி, அருட்பணி செமேரியா தலைமையில் நான்கு அமலமரித் தியாகிகள் கார்த்திகை 1847 இல் காலியில் தரையிறங்கி, கொழும்பிலும் நீர்கொழும்பிலும் தங்கி, ஊர்காவற்றுறை வந்து சேர்ந்தார்கள். அன்று தொடங்கியது அமலமரித் தியாகிகளின் பணிப் பயணம். அந்த நேரம் யாழ் 'வைக்காறியேற் (Vicariate ) ஒரு பக்கத்தில் அனுராதபுரமும் மறுபக்கத்தில் மகாஓயா - கொச்சிக்கடை (நீர்கொழும்பு) வரை நீண்டிருந்தது.

பாரிய நிலப்பரப்பு அமலமரித்தியாகிகள் வந்த நேரம் வறுமை மட்டுமல்ல, கொடிய தொற்று நோய்களும் மக்களை வாட்டி வதைத்தும், கொன்றும் வந்தன. இன்று எம் மத்தியில் தாண்டவமாடும் கொரோனா போன்றது. ஆனால் இன்றைய வசதிகள் அன்றில்லை.

### சுடுகாடு

அமலமரித் தியாகிகளும் கொடிய தொற்று நோய்களுக்கு இரையாகின பதிவுகள் உண்டு. இதைக் கேள்வியுற்ற இயூஜின் டி மசனெட் வெகுவாகத் துன்பப்பட்டார். "இலங்கை எனது குருக்களின் சுடுகாடு" என்று அவர் எடுத்துரைத்ததாகப் பதிவுகள் உண்டு. இப்படிப்பட்ட ஓர் ஆபத்தான நிலையிருந்தும், கிஞ்சித்தும் பின் வாங்காது இயூஜின் தனது குருக்களை இலங்கைக்கும், வட துருவத்துக்கும், தென்னாபிரிக்காவுக்கும் தொடர்ச்சியாக அனுப்பிக் கொண்டிருந்தார்.

அவருடைய அதீத துணிச்சலுக்கு அவரு டைய விசுவாசம் மட்டுமல்லக் காரணம். இயூஜினின் பிரெஞ்சுப் பிரபுத்துவ சிந்தனையில், இலங்கை போன்ற நாடுகளில் வாழும் மக்களை Paqans - வெறும் புறச் சமயத்தவர் என்று மட்டுமல்ல அஞ்ஞானிகள் என்ற சிந்தனை அவரில் இழையோடாமல் இல்லை. கத்தோலிக்க திருஅவையில், அதுவும் ஐரோப்பிய சிந்தனையின் செல்வாக்கினால், இப்படி ஒரு சிந்தனை நீண்டகாலமாக இருந்து வந்தது. தங்களுடைய மெய்யியலைத் தவிர்த்து வேறெதுவும் இல்லை என்ற ஒரு மூடிய அமைப்புள் வாழ்ந்தவர்களின் குறுகிய சிந்தனை இது.

சமேரியா, இலங்கை வந்து இந்நாட்டை உன்னிப்பாகப் பார்த்து, இவர்களிடம் ஏதோ ஒன்று உயர்வாக இருப்பதை உணர்ந்து, இயூஜினின் சிந்தனையைக் கொஞ்சம் மாற்றினார். ஆயினும் இந்த மக்களுக்கு நற்செய்தி நவில வேண்டும் என்ற அவரின் பேரவா அவருடைய துணிச்சலுக்கு இன்னுமோர் காரணமாயிற்று.

இங்கு இன்னுமோர் விடயத்தையம் கூறத்தான் வேண்டும். இலங்கைத் தீவு சிறியதாக இருந்த காரணத்தினாலோ என்னவோ, இலங்கை முழுவதை யும் அமலமரித் தியாகிகள் கத்தோலிக்கமாக மாற்ற வேண்டுமென்ற ஓர் எண்ணமும் அவரிடம் இருந்தது. கனவு பெரிது.

### கல்வி

மதத்தோடு மட்டும் அமதிகள் பணி முடங்கவில்லை. மக்களின் கல்வி வளர்ச்சியிலும் தங்கள் பங்களிப்பைச் செய்தார்கள்.

கார்த்திகை 28ம் நாள் 1855 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து அருட்பணி கிறிஸ்ரோபர் பொன்ஜீன் இலங்கை வந்தார். அமலமரித் தியாகிகளின் தியாக வாழ்க்கை அவரைக் கவர்ந்தது. மூன்று மாதங்களின் பின்னர் வாக்குறுதி அளித்து, அமலமரித் தியாகிகளின் சபையில் இணைந்து கொண்டார். குருக்கள் கல்வியிலும், குழந்தைகள், இளையோர் கல்வியிலும் தமது கவனத்தை அவர் செலுத்தினார்.

பங்குகள் தோறும் பாடசாலைகள் உருவாகின. பரந்தளவில் கல்வி ஊட்டப்பட்டது. பங்குதோறும் தங்கள் மடங்களைக் கட்டி அவற்றில் இருந்து பங்குதோறும் உருவாக்கப்பட்ட பாடசாலைகளில் கல்வியை வளர்க்க திருக்குடும்பச் சகோதரிகள் பாரிய பங்களிப்புச் செய்தார்கள். இதை இங்கு நன்றியோடு பதிவு செய் கின்றேன்.

சித்திரைத் திங்கள் 20ம் நாள் 1883ம் ஆண்டில் அருட்திரு பொன்ஜீன் அடிகள் கொழும்பு சென்று கல்விப் பணியில் மிகுந்த கவனம் செலுத்தினார். கத்தோலிக்க கல்விக்கு இவர் ஆற்றிய சேவை வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. இவர் ஒரு கட்டத்தில் கொழும்பு மறைக்கோட்டத்துப் பேராயராக நியமிக்கப்பட்டார். பிரித்தானிய அரசு கல்வி விடயங்களில் பொன்ஜீன் அடிகளாரைக் கலந்துரையாடுமளவிற்கு, அடிகளாரின் செல்வாக்கு கல்வித்துறையில் இருந்தது. "சமயச் சார்புடைய பாடசாலைகளின் தந்தை" என்று பொன்ஜீன் அடிகளாரை அழைப்பதுண்டு.

### கல்லூரிகள்

வடக்கே புனித பற்றிக்ஸ் கல்லூரி, அனுராதபுரத்தில் புனித யோசவ் கல்லூரி, கொழும்பில் புனித யோசவ் வாஸ் கல்லூரிகள் அமலமரித் தியாகிகளின் கல்விப் பங்களிப்பிற்குச் சான்றுகளாக உண்டு. அருட்திரு லெகொக் அ.ம.தி. அவர்கள் கொழும்பின் தெற்கே உள்ள மாணவர்களின் வசதிக்காக புனித பீற்றர் கல்லூரியை நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டினார். கொழும்பு மறைமாவட்டத்துக்கு இரு பெருங் கல்லூரிகளாக இன்றும் இவை திகழ்கின்றன.

அருட்பணியாளர்களான லெகொக், அருட்பணி லோங், மத்தியூஸ், பீற்றர்பிள்ளை, எமலியானூஸ்பிள்ளை போன்ற பெரியோர்கள் தொடர்ச்சியாக கல்விப் பணியில் ஈடுபட்டு, அமலமரித் தியாகிகளின் பணிப் பயணத்தைச் சிறப்பித்துள்ளார்கள். காலத்தின் தேவை நோக்கி, அருட்பணி பீற்றர்பிள்ளை அ.ம.தி அவர்கள் அகுவைனஸ் கல்லூரியை ஒரு பல்கலைக்கழகத்தின் தகுதிக்கு உருவாக்கினார். பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர் பலர் இக்கல்லூரி மூலம் தங்கள் பட்டப்படிப்பை மேற்கொண்டார்கள்.

ஞானப்பிரகாசருக்கு நூற்றாண்டு விழா வெடுத்து இந்த நாடு பூராகத் தமிழருக்குக் குறிப்பாக அடக்கப்பட்ட கொழும்பு வாழ் கத்தோலிக் தமிழ் மக்களுக்கு ஒரு தமிழ் உணர்ச்சியை, ஓர் எழுச்சியைக் கொடுக்க முயன்றார். செல்வரட்ணம் அ.ம.தி. அவர்கள்.

அமலமரித் தியாகிகள் கல்விக்கு அளித்த பெரும்பங்கினை யாழ் ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம், அருட்திரு பிலேந்திரன், அருட்திரு மங்களராஜா போன்ற வரலாற்று ஆசிரியர்கள் விரிவாக ஆய்வு செய்து எழுதியுள்ளார்கள்.

### மறைக்கோட்டங்கள்

கொழும்பு மறைக்கோட்டத்தையம், யாழ் மறைக் கோட்டத்தையும் நன்கே உருவாக்கி, அந்தந்த மறைமாவட்டங்களைச் சேர்ந்தோரை குருக்களாகவும் உருவாக்கி இன்று இந்த இரு மறைமாவட்டங்களும் அமைப்பு ரீதியாக நன்கே இயங்குகின்றன.

மூன்றாவதாக அனுராதபுரம் மறைக் கோட்டத்தை உருவாக்கி வளர்க்க முனைந்தவர் அருட்திரு குணவர்த்தனா அவர்கள். இவர் பின்னர் அந்த மறைமாவட்டத்து முதல் ஆயரானார். மிகவும் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தவர். எளிமைக்கும் ஏழ்மைக்கும் இடையே எல்லையை வகுக்க முடியாமல் வாழ்ந்தார். இவர் ஓய்வு பெற்ற பொழுது, கொழும்பு துணை ஆயராகப் பணியாற்றி வந்த பேரருட்திரு கோமஸ் அவர்கள் ஆயராகப் பதவி ஏற்றார். இவரது "இதயம்" கொழும்பிலேயே இருந்தபடியினாலோ என்னவோ இவரது பணிக்காலத்தில் அனுராதபுர மறைமாவட்டம் பெரிதாக வளர்ந்தது என்று சொல்வதற்கில்லை. இவர் மீண்டும் கொழும்பு மறைமாவட்டத்துப் பேராயராகப் பதவி யேற்றுச் சென்ற பின்னர், அனுராதபுர மறைமாவட்டம் சிறிது காலம் ஆயரின்றி அநாதையாகிற்று. பின்னர் மீண்டும் அமலமரித் தியாகியாகிய அருட்திரு நோபேர்ட் அந்திராடி அவர்கள் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு அனுராதபுரம் மறைமாவட்டத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அமலமரித் தியாகிகள் தொடர்ந்து இந்த மறை மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். எவ்வளவு தூரம் இம் மறைமாவட்டம் வளரும் என்பது ஒரு வினாவாகவே இப்பொழுது உள்ளது. இக்கட்டுரையாளர் இவ்விடத்தே நேர்மை யோடும் உண்மையோடும் ஒரு விடயத்தைக் கூற விரும்புகிறார். அதாவது சில மறைமாவட்டங்களில் மறைமாவட்டக் குருக்களுக்கும், அமலமரித் தியாகிகளுக்கும் இடையே ஒரு பதட்டம் (tension)தொடர்ச்சியாக இருக்கின்றது. இந்தப் பதட்டத்தினால் பாதிக்கப்படுவது மக்கள். அவர்களின் தேவைகளைச் சந்திக்க முடியாமைக்கு இப்பதட்டமும் ஒரு காரணம். பணிக்கென்று வருபவர்கள் தங்களை அருட்பணி என்று அழைப்பவர்கள் ஏன் இந்தப் பதட்டத்தை வளர்க்கிறார்களென்று புரியவில்லை. பணியில் போட்டியா? அதனால் புகழ் தேடும் போட்டியா? அன்றேல் பதவி நோக்கிய போட்டியா?

அனுராதபுர மறைமாவட்டம் ஒரு தனிச்சிறப்பியல்பைக் கொண்டது. அனுராதபுரம் பௌத்தத்தின் புனித நகரமாகக் கணிக்கப்படுகின்றது. பௌத்த மக்கள் நித்தமும் அங்கு படையெடுக்கிறார்கள். இந்தச் சூழலில்தான் அனுராதபுர கத்தோலிக்க மறைக்கோட்டம் பணிசெய்ய வேண்டியுள்ளது. அனுராதபுரத்தில் அமலமரித் தியாகிகள் அளிக்கும் பணியால் அங்குள்ள பௌத்த மக்கள் பயன்பெறுவது கண்கூடு. மசனெட்டின் காலத்தில் போலன்றி, வேறுபட்ட நிலையில் நின்று தான் அமல மரித்தியாகிகள் பணிபுரிகிறார்கள். திரு முழுக்குப் பெற்று கத்தோலிக்க மறையைத் தழுவவேண்டுமென்ற நோக்கோடு அவர்கள் பணி புரியவில்லை. அது தேவையுமில்லை.

### நற்செய்திப் பணிக்கு ஒரு புதுமுகம்

இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் பின் புலத்தில், நாம் ஏனைய மதங்களை மதிக்கவும், அவற்றின் ஆன்மீகத்தை உள்வாங்கவும், அவர்களுடன் இணைந்து பயணிக்கவும் பழகிக் கொண்டோம். எங்கள் நாட்டைப் பொறுத்தமட்டில் மதமாற்றமல்ல, மனமாற்றம் தான் ஓர் அவசியத் தேவையாகத் தோன்றுகின்றது. மனித விழுமியங்களுடன் வாழ்வதுதான் காலத்தின் முக்கிய தேவையாக உள்ளது.

இந்த நாட்டு மதங்கள் இப்பணியைச் செவ்வனே செய்வதாகத் தோன்றவில்லை. மதத் துவேசங்களை வளர்ப்பனவாகவே தோன்றுகின்றன. மதத் துவேஷம் மதத்தின் அடிப்படைத் தன்மைக்கு முரணானது.

ஒரு மதம், ஒரு மொழி, ஒரு கொடி, ஒரு நாடு என்பது ஜனநாயகத்திற்கு எதிரானது மட்டுமல்ல, மனிதத்திற்கும் எதிரானது: உண்மையான மதத்தின் அடிப்படைத் தன்மைக்கு முற்றிலும் முரணானது. ஒரு நாடு, ஒரு சட்டம், ஆனால் சட்டத்தை அமுலாக்கும் பொழுது இனத்துக்கு இனம் மாறுபடுகின்றது. சிறுபான்மை மக்களுக்கு இந்த நாட்டின் நீதித்துறையில் நம்பிக்கை இல்லை. இதற்கு வலுவான புதிய குரல் கொழும்புப் பேராயர் மல்கம் ரஞ்சித்தினுடையது.

(வளரும்...)

# சிறுத்தீவு தூய லூர்து அன்னை ஆலய திருவிழா



யாழ்ப்பாணம் குருநகர் பங்குக்குட்பட்ட சிறுத்தீவு தூய லூர்து அன்னை ஆலயத் திருவிழா 20ஆம் திகதி நடைபெற்றது. யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரெட்ணம் அவர்கள் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இறுதியில் அன்னையின் திருச்சுரூப ஆசீரும் வழங்கப்பட்டது. குருக்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் என 350ற்கும் அதிகமானோர் இத் திருவிழாவில் கலந்து கொண்டதுடன் குருநகர் பங்குதந்தை அருட்பணி A.J.யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இந்நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யூலனூரின் மண்ணின் மைந்தன்
திரு இராசநாயகம் சந்திரசேகர
04.03.2022 அன்று
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தின்
35 ஆவது
பட்டமளிப்பு விழாவில்
கல்வியியல் முதுமாணி (M.ed.)
பட்டம் பெறுகிறார். இவர்
PGDE-OUSL,
BA- University of peradeniya,
Diploma in counseling-NISD,
Diploma in Teaching-VNCoE
ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார்.

இவர் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் யூலனூர் சமூகம்

AD/23


## 125 ஆம் ஆண்டு யூபிலி விழாவுக்கு ஆயத்தமாகும் மண்டைதீவுப் பங்கு



மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தைத் சேர்ந்த குருக்கள் துறவிகள் மற்றும் பக்திச்சபையினருக்கான ஒன்றுகூடல் நிகழ்வு 21ம் திகதி மண்டைதீவு அனுசா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. புனித பேதுருவானவர் ஆலயத்தின் 125 ஆம் ஆண்டு யூபிலி நிகழ்வு வருகின்ற ஆகஸ்ட் மாதம் 1ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. அதற்கான முன்னாயத்தப் பணிகளை மேற்கொள்ளும் முகமாக இவ் ஒன்றுகூடல் மண்டைதீவு பங்குத்தந்தை அருட்திரு டேவிற் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்றது.

**நூறு பக்தர்களுடன் கச்சைதீவு ....** (1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையைச் சேர்ந்த 50 பக்தர்களுடனும், இந்தியாவைச் சேர்ந்த 50 பக்தர்களுடன் மட்டுமே கொண்டாட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் பக்தர்கள் சார்பாக நெடுந்தீவுப் பங்கைச் சேர்ந்த மூன்று தடுப்பூசிகளைப் பெற்று ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 50 பக்தர்கள் மட்டுமே பங்கேற்பர்.


## பணி. எஸ்.ஜே.இம்மானுவேல்





1) முடிந்த முள்ளிவாய்க்காலும் தொடரும் போராட்டமும் - 150/-
2. இனப்பிரச்சினையும் இலங்கைத் திருச்சபையும் - 100/-
3. பொது நிலையினரின் எழுச்சி - 50/-
4. பொது நிலையினரின் முதிர்ச்சி - 50/-
5. அன்பியங்களும் அடிப்படைக் கிறிஸ்தவ குழுமங்களும் - 50/-
6. தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி - 150/-
7. கத். குருத்துவம் - ஒரு ஒப்பற்ற பணிவாழ்வுக்கான அழைத்தல் - 100/-
8. Some Theological Concerns of the Asian Churches - 200/-

**ஆசிரியருடன் தொடர்பு: ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்**

**0763531104**



## நீங்காத நினைவுகளில் 3ம் ஆண்டு

மண்ணகப் பிறப்பு
24 . 10 . 1966

விண்ணகப் பிறப்பு
09 . 03 . 2019



### அமரர் யோ.அ.லியோ அன்ரசன்
(மாதகல்)

அப்பா!
நீங்கள் எமைப் பிரிந்து மூவருடங்கள் ஆனதே!
எமக்காக எல்லாம் செய்த உங்களின்,
அன்புக்காகவும், அரவணைப்பிற்காகவும் ஏங்குகின்றோம் நிதமும்.
படைத்த மாபரன்
உங்களுக்குத் தனது அமைதியில் இளைப்பாறுதலையும்,
எமக்குத் தேறுதலையும் அருள்வாராக.

இவரின் ஆன்ம இளைப்பாறுதலுக்கு 08.03.2022 அன்று மாலை 5.00 மணிக்கு மாதகல் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

நல்லாயன் வீதி,
சில்லாலை.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

AD/24



## விண்ணக இன்பத்தின் 5ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
39 . 01 . 1941

ஆண்டவரின் நிழலில்
13 . 03 . 2017



### திருமதி.மேரி மாட்டினா கமலா சவரிமுத்து
**(விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)**

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்: என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 திமோ 4:7)

27, 1ம் ஒழுங்கை,
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்



## நீங்காத நினைவுகளில் 8ம் ஆண்டு

மண்ணில்
23 . 11 . 1935

விண்ணில்
15 . 03 . 2014



### அமரர் அருளானந்தம் திரேசம்மா

அம்மா! அம்மா!
எம் அன்புக்கு இனியவரே
பாசமிக்க சகோதரமாக...
சிறந்த மனைவியாக...
அன்பும், கண்டிப்புமிக்க அன்னையாக...
கரிசனைமிக்க மாமியாக...
அரவணைக்கும் பேத்தியுமாக...
எம்முடன் வாழ்ந்து, மறைந்து எட்டு வருடங்கள் ஆனாலும் மறவோம் எம் அம்மா உம்மை
இவரின் ஆன்மா இறைவனின் அமைதியில் இளைப்பாறுதல் அடைய இறைஞ்சுகின்றோம்

இவரின் ஆன்மா இளைப்பாறுதலுக்காக 15.03.2022 அன்று காலை 6.00 மணிக்கு யாழ்ப்பாணம் புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

35/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

AD/25

## இளையோர் ஆணைக்குழு இயக்குநரின் பிரியாவிடையும் புதிய இயக்குநரின் வரவும்



யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் இயக்குநராகப் பணியாற்றிய அருட்திரு அன்ரன் ஸ்ரிபன் அடிகளின் பணிக்கு நன்றி கூறுவதுடன் புதிய இயக்குநர் அருட்திரு X.W. ஜேம்ஸ் அடிகளை வரவேற்கும் நிகழ்வும் கடந்த 20ம் திகதி யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய செயற்குழு உறுப்பினர்களின் ஒழுங்குபடுத்தலில் மறை நதி கத்தோலிக்க ஊடகமையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அருட்திரு அன்ரன் ஸ்ரீபன் அடிகள் கடந்த ஐந்து வருடங்களாக இளையோர் ஆணைக்குழுவின் இயக்குநராகப் பணியாற்றியதுடன் இவருடைய காலப்பகுதியில் இளையோர் பேரணி, நாடகப் போட்டி, கிறிஸ்மஸ் கரோல் குழுப்பாடல் போட்டி, தலைமைத்துவப் பயிற்சி, இளையோர் மாநாடு, மறைக் கோட்டத் தரிசிப்புக்கள் போன்ற செயற்பாடுகள் நடைபெற்றுள்ளதுடன் குறும்படப் போட்டி மற்றும் ஊடகத்துறை சார் கருத்தரங்குகள் சிறப்பாக நடைபெற்று வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பலவான் இயேசுவே இறுவட்டு வெளியீடு




"பலவான் இயேசுவே" திருவழிபாட்டுப் பாடல்கள் அடங்கிய இறுவட்டு வெளியீடு 26 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலா மன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் நடை பெற்றது. இலங்கையில் அமலமரித்தியாகிகள் பிரசன்னத்தின் 175வது ஜீபிலி ஆண்டில் யாழ்.மாகாண அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு A. யூட் கறோவ் அடிகளின் முயற்சியில் உருவான பாடல்களே இவ் இறுவட்டில் வெளிவந்துள்ளது. இவ் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அடிகளும் சிறப்பு விருந்தினராக அமலமரித் தியாகிகளின் யாழ். மாகாண முதல்வர் அருட்திரு இயூயின் பெனடிக்ற் அவர்களும் கௌரவ விருந்தினராக செபமாலைத்தாசர் சபையின் இலங்கை மாகாண முதல்வர் அருட்திரு பிரான்சிஸ் ஜெயசீலன் அடிகளும் கலந்து சிறப்பித்தனர்.

## பூநகரி பள்ளிக்குடாவில் திருக்குடும்பக் கன்னியர்களின் பணி



போர்டோவின் திருக்குடும்பக் கன்னியர் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் பூநகரி, பள்ளிக்குடா பிரதேச மக்களின் மேம்பாட்டை நோக்காகக்கொண்டு முன்னெடுத்த சிறப்பு நிகழ்வு கடந்த 17ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை நடைபெற்றது. திருக்குடும்ப துறவற சபையின் கிளைகளை உள்ளடக்கிய பீற்றர் பியன்வெனு நோஆய் குழுவின் 22 அங்கத்தவர்கள் இந்நிகழ்வில் கலந்து குடும்ப தரிசிப்பு, இளையோர் மற்றும் மறைக்கல்வி மாணவர்களுக்கான கருத்தரங்குகள் போன்ற நிகழ்வுகளை முன்னெடுத்திருந்தனர். இந்நிகழ்வுகளின் இறுதியில் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ.ஜெபரட்ணம் அடிகளின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் மக்கள் தமது வீட்டு வளாகத்தில் நடுவதற்கான பயன்தரு மரங்களும் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வுகள் பூநகரிப் பங்குத் தந்தை அருட்திரு சுலக்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் சிறப்பாக நடைபெற்றது.

## நெடுந்தீவில் மகா ஞானொடுக்கம் ஆரம்பம்



நெடுந்தீவுப் பங்கில் மகா ஞானொடுக்கம் கடந்த 20ஆம் திகதி புனித யுவானியார் ஆலயத்தில் ஆரம்பமானது. ஆரம்ப நாள் நிகழ்வில் அமல மரித்தியாகிகள், துறவற சபையின் மறையுரைஞர் குழுமத்தின் முதல்வர் அருட்திரு கமலநாதன் அடிகள் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் அருட்பணிச் சபையினர், அனைத்து ஆலயங்களின் அன்பியங்களின் வலயங்களின் நிர்வாகத்தினர், அமல மரித்தியாகிகள் துறவற சபையினைச் சேர்ந்த குருக்கள் மற்றும் அருட்சகோதரிகள் இறைமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## மாரீசன்கூடலில் மறையாசிரியர்கள் கௌரவிப்பு



இளவாலை மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள மாரீசன்கூடல் பங்கில் முன்நாள் மறையாசிரியர்களைக் கௌரவிக்கும் சேவைநலன் பாராட்டுவிழா கடந்த 16ஆம் திகதி சேந்தாங்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. திருப்பலியுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் 30 முன்னாள் மறையாசிரியர்கள் கௌரவிக்கப்பட்டு நினைவுச்சின்னம் வழங்கப்பட்டதோடு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி நடு நிலைய இயக்குநர் அருட்திரு X.W. ஜேம்ஸ் அடிகள் மறைப்பணி என்பது வாழப்பட வேண்டியது மறையாசிரியர்களின் பணி முடிவுபெறும் பணியல்ல, தொடரப்பட வேண்டிய பணியாகும் எனக் குறிப்பிட்டார். பங்குத்தந்தை அருட்திரு கான்ஸ்போவர் அடிகளின் தலைமையில் மறையாசிரியர்களின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

## கொய்யாத்தோட்டத்தில் புனித வின்செண்ட் டி போல் சபை பொது அமர்வு



கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயப் பங்கின் புனித வின்சன் டி போல் சபை - கிறிஸ்து அரசர் பந்தியினரது முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் கடந்த 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில் புனித வின்சன் டி போல் மத்திய சபையின் ஆன்ம ஆலோசகர் அருட்திரு S. நேசநாயகம் அடிகள் கலந்து சிறப்பித்தார். பங்கின் மத்திய சபைத் தலைவர் செயலாளர் உட்பட அயற் பங்கிலுள்ள பந்திகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்வு கொய்யாத்தோட்டப் பங்குதந்தை அருட்திரு ஆனந்தகுமார் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் சிறப்பாக இடம்பெற்றது.

## மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த கிறிக்கெட் போட்டி



கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் சர்வ மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி நிகழ்வு கடந்த 19ம் திகதி உருத்திரபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. கிளி முல்லைப் பங்குகளின் 21 அணிகள் பங்கு பற்றிய இப்போட்டியில் குமுழமுனை, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, கூழாமுறிப்பு ஆகிய அணிகள் அரை இறுதி மற்றும் இறுதிப் போட்டிகளுக்குத் தெரிவாகின. இறுதிப்போட்டியில் கிளிநொச்சி புதுக்குடியிருப்பு அணிகள் மோதி கிளிநொச்சிப் பங்கு அணி முதலாம் இடத்தைப் பெற்றுக் கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது.

இரண்டாம் இடத்தினைப் புதுக்குடியிருப்புப் பங்கு அணியும் மூன்றாம் இடத்தினை கூழாமுறிப்பு பங்கு அணியினரும் பெற்றுக்கொண்டனர். கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு செபஜீவன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு P.J. ஜெபரட்ணம் அடிகள் கலந்து சிறப்பித்தார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.